# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

சனிக்கிழமை 11.09.2021 supeedsam.com supeedsam@gmail.com







## ஐ.நா.வுக்கு தமிழரசுக் கட்சி எந்த ஆவணத்தையும் அனுப்பவில்லை

### சுமந்திரன் தெரிவிப்பு

(யாழ்கீதன்)

தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஒரு ஆவணத்தை அனுப்பி இருக்கின்றார்.நாங்கள் தமிழரசுக் கட்சியாக எந்த ஆவணத்தையும் ஐ.நா.வுக்கு அனுப்பவில்லை என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட எம்.பி.யுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

புலிகளுக்கு எதிராக சர்வதேச விசாரணையை கோரி தமிழரசுக் கட்சி ஆவணம் அனுப்பி

02 ஆம் பக்கத்தில்...



## மோசமான மனித உரிமைகள் நிலைமையை ஆய்வு செய்யுங்கள்

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தல்




ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை இலங்கையின் மோசமான மனித உரிமைகள் நிலைமையை கடுமையாக ஆய்வு செய்து உண்மையான முன்னேற்றங்களுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் கேட்டுக்கொண்டுள்ளது.

எதிர்வரும் கூட்டத்தொடரில் அரசாங்கத்தின் தொடர்ச்சியான துஷ்பிரயோகங்கள் மற்றும், மக்கள் மற்றும் சட்டத்தின் ஆட்சி பலவீனமடைவது குறித்து தங்கள் எச்சரிக்கையை வெளிப்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

## சம்பந்தன் ஐ.நா.வுக்கு அனுப்பிய கடிதத்தை நாங்கள் எவரும் ஏற்றுக்கொள்ளவில்லை

### சிறிதரன் தெரிவிப்பு



(ஜுட்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன், ஐநாவுக்கு அனுப்பிய கடிதம் தொடர்பில், அதிலுள்ள விடயங்கள் தொடர்பில் நாங்கள் எல்லோரும் ஏற்றுக் கொண்டதாக இல்லை என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

இன்று அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## தனிமைப்படுத்தல் ஊரடங்கு 21 ஆம் திகதி வரை நீடிப்பு

நாட்டில் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப் படுத்தல் ஊரடங்கு உத்தரவு மேலும் 21ஆம் திகதி வரை நீடிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை இலங்கையின் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தனது டுவிட்டர் பக்கத்தின் ஊடாக தெரியப்படுத்தியுள்ளார்.

அதன்படி தனிமைப்படுத்தல் ஊரடங்கானது எதிர் வரும் 21ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் என குறிப்

02 ஆம் பக்கத்தில்...

## தடுப்பூசிகளை பெற்றுக் கொண்டாலும் தாக்கங்களில் இருந்து மீள சில நாட்கள் செல்லும்

### வைத்தியர் ஏ.ஆர்.எம். தௌபீக்

(பாறுக் ஷிஹான்)

கொரோனா மூன்றாவது அலையில் மொத்தமாக 42784 நோயாளர்களும் 772 மரணங்களும் ஏற்பட்டுள்ளன. டெல்டா திரிபு என்பதை பற்றி பயப்பட வேண்டாம்.ஏனெனில் 2 தடுப்பூசிகளை பெற்றவர்களுக்கு இதன் தாக்கம் குறைவாக உள்ளதை எம்மால் அவதானிக்க கூடியதாக உள்ளது.ஆகவே தடுப்பூசிகளை நீங்கள்(மக்கள்) பெற்றுக்கொண்டாலும் இத்தாக்கங்களில் இருந்து பாதுகாக்க சில நாட்கள் செல்லும் என கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஏ.ஆர்.எம். தௌபீக் தெரிவித்தார்.



நேற்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

02 ஆம் பக்கத்தில்...

## நாடு முழுவதும் டெல்டா பரவல்

இலங்கையில் 95.8% கொவிட் 19 தொற்று நோய் பரவலுக்கு ஆபத்தான டெல்டா உரு திரிவு வைரஸே காரணமாக உள்ளதாக ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை மற்றும் நோயெதிர்ப்பு மற்றும் உயிரியல் மூலக்கூறு நிறுவனத்தின் அறிக்கையில் தெரியவந்துள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

## பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தையோ கோட்டாவையோ ஒருபோதும் ஆதரிக்கவில்லை

தற்போதைய பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தையோ அல்லது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையோ ஒருபோதும் ஆதரிக்கவில்லை என கத்தோலிக்க திருச்சபை தெரிவித்துள்ளது.

அப்போதைய ஐக்கிய தேசிய முன்னணி தலைமையிலான அரசாங்கத்தை மட்டுமே

02 ஆம் பக்கத்தில்...








## அமெரிக்கா பயணமாகிறார் கோத்தா



(ஊர்காவலன்)

எதிர்வரும் 21 ஆம் இல் நியூயோர்க்கில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் 76 வது அமர்வில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பங்கேற்கவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் ஜனாதிபதியின் முதல் உரை இது என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

## மண் அகழ்வு குறித்த சாணக்கியன் எம்.பி யின் கருத்து தொடர்பில் சுயாதீன விசாரனையை நடாத்த ஆளுனர் பணிப்பு



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

சட்டவிரோத மணல் அகழ்வு நடைபெறுவதாக கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் முன்வைத்த குற்றச்சாட்டு குறித்து சுயாதீன

02 ஆம் பக்கத்தில்...











## கோக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நடைபெறமாட்டாது



(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரசித்தி பெற்ற ஆலயமான கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவமானது இவ்வாண்டு நடைபெமாட்டாது என ஆலய நிர்வாகம் மட்டக்களப்பில் உள்ள மட்டு ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் ஊடாக அறிவித்துள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

## அமெரிக்கா பயணமாகிறார் கோத்தா

இந்த விஜயத்தின்போது, ஜனாதிபதி, பொருளாதாரம், கல்வி மற்றும் விவசாயம் உள்ளிட்ட பல துறைகள் குறித்து பல துறைசார் தலைவர்களுடன் இருதரப்பு கலந்துரையாடல்களை நடத்த எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த விஜயத்தின் போது ஜனாதிபதியுடன் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் ஆலோசகர் லலித் வீரதுங்க மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜெயநாத் கொலம்பகே ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நாட்டின் தற்போதைய நிலைமையை கருத்தில் கொண்டு தனது கொள்கைக்கு ஏற்ப குறைந்த எண்ணிக்கையிலான பிரதிநிதிகளுடன் இந்த விஜயத்தை மேற்கொள்ள ஜனாதிபதி முடிவு செய்துள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.




## தனிமைப்படுத்தல் ஊரடங்கு 21 ஆம் திகதி

பிட்டுள்ளார். நாட்டில் கோவிட் தொற்று நிலை தீவிரமடைந்ததையடுத்து கடந்த 20 ஆம் திகதி முதல் நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கானது அமுல்படுத்தப்பட்டது.

இந்த நிலையில் தொடர்ச்சியாக ஊரடங்கு நீடிக்கப்பட்டு எதிர்வரும் 13ஆம் திகதி அதிகாலை நான்கு மணி வரையில் தனிமைப்படுத்தல் ஊரடங்கானது அமுல்படுத்தப்படுவதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறான சந்தர்ப்பதிலேயே தனிமைப்படுத்தல் ஊரடங்கு தொடர்பான குறித்த புதிய அறிவிப்பு வெளியாகியுள்ளது.

## பொதுஜன பெரமுன தலைமையிலான

விமர்சித்ததாக கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் பயங்கரவாதத் தாக்குதல்களைப் பற்றி அறிந்திருந்தாலும் அதைத் தடுக்கவில்லை என்பதனால் அந்த நேரத்தில் இருந்த அரசாங்கத்தை மட்டுமே தாம் விமர்சித்ததாக அவர் கூறினார். கொழும்பில் உள்ள பேராயர் இல்லத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றிய போதே பேராயர் இதனைத் தெரிவித்தார். அந்த நேரத்தில் எந்த ஜனாதிபதி வேட்பாளரையும் சந்திக்க கூட அவர்கள் தயாராக இருக்கவில்லை என்றும் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை குறிப்பிட்டார்.

முன்னதாக இதே ஊடக சந்திப்பிலேயே ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படவில்லை என்பதோடு விசாரணை குறித்தும் அதிருப்தி வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மோசமான மனித உரிமைகள் நிலைமையை

இதன் மூலம் இலங்கை அரசாங்கத்தின் சர்வதேச மனித உரிமை கடமைகளை நிறைவேற்றுவதற்கான அழுத்தத்தை கொடுக்க தங்கள் விருப்பத்தை மற்ற நாடுகள் வெளிப்படுத்த வேண்டும் என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது.

மேலும் தொடர்ச்சியான சர்வதேச கவனமும் அழுத்தமும் சிறுபான்மை சமூகங்கள், ஆர்வலர்கள் மற்றும் ஊடகவியலாளர் எதிர்கொள்ளும் அபாயங்களைக் குறைக்க உதவும் என்றும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் தெற்காசிய பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி கூறியுள்ளார்.

அத்தோடு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வடக்கு மற்றும் கிழக்கில் சிறுபான்மையினரை கைது செய்து அவர்களை அச்சுறுத்தும் செயற்பாட்டை அதிகாரிகள் மேற்கொண்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.




## நாடு முழுவதும் டெல்டா பரவல்

இலங்கையில் உள்ள பல்வேறு மாகாணங்களில் வெவ்வேறு கொரோனா வைரஸ் வகைகளின் பரவல் குறித்து ஆய்வு செய்ய பின்னர் ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் இதை கண்டுபிடித்துள்ளனர்.

பேராசிரியர் நீலிகா மாளவிகே, டாக்டர் சந்திம ஜீவந்தர உள்ளிட்ட ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் இந்த ஆய்வை மேற்கொண்டனர். நாடு முழுவதும் தெற்று நோய் பரவலுக்கு சராசரியான 95.8% வீதம் டெல்டா திரிபே காரணாக உள்ளது. சில மாகாணங்களில் அதன் பரவல் வீதம் 84% முதல் 100 வீதம் வரை உள்ளது எனவும் ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, வடக்கில் இருந்து பெறப்பட்ட 199 பேரின் மாதரிகளை ஆய்வு செய்ததில் அதில் 113 பேர் டெல்டா திரிபால் பாதிக்கப்பட்டுள்ளமையும் ஆய்வில் கண்டறியப்பட்டது.

## மண் அகழ்வு குறித்த சாணக்கியன் எம்.பி யின் கருத்து தொடர்பில்

விசாரணை நடத்துமாறு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபருக்கு (IGP) உத்தரவிட்டார்.

கிழக்கு மாகாணத்தின் இது தொடர்பில் டிஐஜி விசாரணையை நடத்தி, சம்பந்தப்பட்ட அறிக்கையை மாண்புமிகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சஷவிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அரசாங்கம், அரசாங்க அமைச்சர்கள், ஆளும் தரப்பு கட்சி அரசியல்வாதிகள் மற்றும் தனக்கான தனிப்பட்ட சலுகைகளைப் பயன்படுத்தி, கிழக்கு மாகாணத்தில் மணல் அகழ்வு தொடர்பாக இராசமாணிக்கம் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்ததாக அவர் கூறினார்.

மகாவெலி ஆற்றின் சுற்றுப்புறத்தில் மணல் அகழ்வு நீண்ட காலமாக நடைபெற்று வருகிறது மற்றும் புவியியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகத்தால் முழு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுக்க பல மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்களில் அவர் வலுவான முடிவுகளை எடுத்ததாக ஆளுநர் வலியுறுத்தினார்.

சட்ட விரோத மணல் அகழ்வுகளை நிறுத்த பொலிஸ் விசேட அதிரடிப் படை மற்றும் கடற்படைக்கும் அறிவுறுத்தினார்.

சட்டவிரோத மணல் அகழ்வை நிறுத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தேவையான உத்தரவுகளை பிறப்பித்ததாகவும் ஆனால் எந்த விசாரணையும் இல்லாமல் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் ஆளுநர் கூறிய குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்று ஆளுநர் மேலும் கூறினார்.

எவ்வாறாயினும், கிழக்கு மாகாணத்தின் பொறுப்பான சிரேஷ்ட டி.ஐ.ஜி இந்த குற்றச்சாட்டுகளின் உண்மையை நாட்டுக்கு வெளிப்படுத்துவார் என்றும் அவர் நம்புகிறார் .

## கொரோனாவின் டெல்டா திரிபு பயப்பட வேண்டாம்

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது

கிழக்கு மாகாணத்தில் உள்ள 4 பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைகளில் கொரோனா வைரஸின் பிறழ்வு வகை டெல்ரா வகை திரிவு பரவலாக அதிகரித்துள்ளமை தொடர்பில் ஆய்வு கூட அறிக்கைகள் எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளன. கொரோனா மூன்றாவது அலையில் மொத்தமாக 42784 நோயாளர்களும் 772 மரணங்களும் ஏற்பட்டுள்ளன. இதனால் ஆகஸ்ட் மாத மூன்றாம் நான்காம் வாரங்களில் நோயாளர்களின் எண்ணிக்கையும் மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரித்து காணப்பட்டிருந்தது.

எனினும் செப்ரம்பர் மாதத்தில் நோயாளர்களின் எண்ணிக்கை சற்று குறைவடைந்து இருந்தாலும் எமக்கு ஆறுதலாக இருந்தாலும் இது மேலும் இவ்வாறு குறைவடைய செய்வது பொதுமக்களின் அன்றாட வாழக்கையிலும் இரண்டு தடுப்பூசிகளை பெறுவதிலும் ஏனைய தொற்றா நோய்களான நீரிழிவு நோய் உயர்குருதி அமுக்கம் ஏனைய சுவாச இருதய நோய்கள் இவற்றை கட்டுப்பாட்டில் வைத்திருப்பது மிகவும் அவசியமாகும்.

ஏனெனில் இந்நோய்கள் இருப்பவர்களும் தடுப்பூசி முற்றாக பெறாதவர்களும் 60 வயதிற்கும் மேற்பட்டவர்களுமே அதிகமாக மரணத்தை தழுவியுள்ளனர். கிழக்கு மாகாணத்தில் எமக்கு போதுமான வகையில் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ளன.அதனால் தடுப்பூசியை இதுவரை பெறாதவர்கள் அவர்களது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு சென்று தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள முடியும்.எமக்கு தேவையான முழு தடுப்பூசிகளையும் அரசாங்கம் வழங்கிகொண்டிருக்கின்றது.மேலும் இப்பிராந்தியத்தில் உள்ள 20 வயது முதல் 30 வயது வரையானவர்களுக்கும் தடுப்பூசி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே அரசாங்கம் தற்போது அமுல்படுத்தியுள்ள சட்டதிட்டங்களை மக்களாகிய நீங்கள் அலட்சியம் செய்யாமல் தங்களது நலனில் ஒவ்வொரும் அக்கறை எடுக்க வேண்டும்.டெல்டா திரிபு என்பதை பற்றி பயப்பட வேண்டாம்.ஏனெனில் 2 தடுப்பூசிகளை பெற்றவர்களுக்கு இதன் தாக்கம் குறைவாக உள்ளதை எம்மால் அவதானிக்க கூடியதாக உள்ளது.

ஆகவே தடுப்பூசிகளை நீங்கள்(மக்கள்) பெற்றுக்கொண்டாலும் இத்தாக்கங்களில் இருந்து பாதுகாக்க சில நாட்கள் செல்லும். எனவே தேவையற்ற ஒன்று கூடல்களை தவிருங்கள்.முகக்கவசங்களை நேர்த்தியாக அணியுங்கள்.சமூக இடைவெளிகளை பின்பற்றி கொள்ளுங்கள்.மேலும் செப்டெம்பர் இறுதி பகுதியில் எமது பகுதியில் இந்நோய் தாக்கம் மேலும் மேலும் குறைவடைந்து செல்லும் என்பதை எதிர்பார்க்கின்றோம்.

அத்தோடு யுனிசெப் நிறுவனத்தினால் முன்களப் பணியாளர்களாக கடமையாற்றும் சுகாதார ஊழியர்களுக்கு தேவையான ஒரு தொகை பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.இதில் முகக்கவசம், முகத்திரை, பி.பி.ஈ. பாதுகாப்பு அங்கிகள், தொற்றுநீக்கி (சனிடைசர்), உட்பட பல்வேறு பாதுகாப்பு உபகரணங்களை கொண்ட பொதிகள் எமக்கு வழங்கப்பட்டுள்ளன.இதற்கு யுனிசேப் நிறுவனத்திற்கு சுகாதார அமைச்சு சார்பாகவும் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் சார்பாகவும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன் என்றார்.

## சம்பந்தன் ஐ.நா.வுக்கு அனுப்பிய கடிதத்தை நாங்கள் எவரும்

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

அதாவது இலங்கையில் ஒரு போர்க்குற்றம் நடைபெற்றது, இன அழிப்பு நடைபெற்றது என்பது தெட்டத் தெளிவான உண்மை. அதாவது இன்று காணாமல் போனோர் பற்றியோ அல்லது நில ஆக்கிரமிப்புக்கள் பற்றியோ எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை, தமிழர்கள் அடக்கிய ஆளப்படுகின்ற ஒரு நிலையே இங்கு காணப்படுகின்றது.

இவ்வாறு குறிப்பிட்டு அவர் ஐ.நாவுக்கு அனுப்பிய கடிதம் தொடர்பில் பல்வேறு விமர்சனங்களும் குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளில் ஒன்றான ரெலோ அமைப்பினூடாக தங்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் நாங்கள் எந்த கையொப்பமும் இடவில்லை.

அதேபோல சுமந்திரன் மின்னஞ்சல் ஊடாக அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் இரு தரப்பும் போர்க் குற்றத்தில் ஈடுபட்டவர்கள் என்ற விடயம் உள்ளடக்கப்பட்டு இருக்கின்ற காரணத்தினால் அது பற்றி நாங்கள் ஆராய வேண்டும். காரணம் இது ஒரு தரப்பு களத்தில் இல்லை மற்றைய தரப்பான அரசு இந்த நாட்டினுடைய இறைமையுள்ள அரசை நடத்துகின்ற ஒரு அரசாங்கம் தன் குடிமக்கள் மீது போர்க்குற்றத்தை நடத்தியுள்ளது. குண்டுகளை வீசி மக்களைப் படுகொலை செய்திருக்கிறது, பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் மக்களை அழைத்து அதற்குள் குண்டு போட்டுக் கொலைசெய்துள்ளது. ஒரு இன அழிப்பு, இன அழிப்புப் போர்க்குற்றம் புரிந்திருந்தால் அதில் ஒரு தரப்பு இல்லாவிடின் அதனை எவ்வாறு விசாரிப்பது? கண்முன்னே நடந்த இனப்படு கொலைக்கு அதில் குறிப்பிட்ட விடயம் எங்களுக்கு ஒத்து வரக் கூடியதாக இருக்கவில்லை.

அது பற்றி ஆராயலாம் எனக் கடந்த திங்கட்கிழமை ஆராயலாம் எனத் தீர்மானித்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை இணைய வழியிலான ஒரு கலந்துரையாடலின் போது சம்பந்தன் ஐயா குறித்த கடிதத்தைத் தான் ஒரு தனிமனிதனாக அனுப்பிவிட்டார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் குறிப்பிட்டிருந்தார்.

அவர் அதனை அனுப்பியிருந்தால் நாங்கள் எதனையும் செய்ய முடியாது. காரணம் அவர் சிங்கக் கொடியைப் பிடித்து விட்டு காளியின் கொடி என்று சொல்லுவார் மக்கள் அதனை ஏற்றுக் கொள்வாங்கள். அவர் நாடாளுமன்றத்தில் புலிகள் ஜனநாயகத்தை மதிக்கவில்லை மனித உரிமை மீறல்களைப் புரிந்தார்கள், அதனால் அவர்கள் அழிந்தார்கள் என்று பேசுவார் அதையும் மக்கள் ஏற்றுக் கொள்வாங்கள் என்ற நம்பிக்கை அவருக்கு உள்ளது.

ஆனால் கடிதத்தை அனுப்பி விட்டு இரண்டு தரப்பையும் விசாரிக்க வேண்டும் என்றால் எல்லோரும் ஏற்றுக் கொண்டதாகக் கருத முடியாது. அவர் அனுப்பி இருக்கின்ற கடிதம் தொடர்பில் நாங்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டதாக இல்லை. நாங்கள் இது தொடர்பில் பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடி இருக்கின்றோம், பேசி இருக்கிறோம். ஆனால் கடந்த 19ஆம் தேதி அனுப்ப வேண்டிய கடிதத்தை நாங்கள் அனுப்பத் தவறி இருக்கிறோம். இது எங்களிடம் இருக்கின்ற பெரும் தவறு என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஐ.நா.வுக்கு தமிழரசுக் கட்சி எந்த ஆவணத்தையும் அனுப்பவில்லை

இருப்பதாக பத்திரிகைகள் கூறுகின்றன. எதை வைத்து அவர்கள் அவ்வாறு கூறுகிறார்கள்?. பத்து வருடங்களாக எல்லோருடைய கையிலும் இருக்கின்ற நிபுணர் குழுவின் அறிக்கையை தமிழரசுக்கட்சியா எழுதியது? உலகத்திலேயே சிறந்த மனித உரிமை அமைப்பினரால் அது வரையப்பட்டதாகும்.

சர்வதேசத்தில் என்ன நடக்கின்றது என்ற தெளிவு இல்லாதவர்கள். தெளிவு இருந்தும் இல்லாதது போல் நடிப்பவர்கள் இதனைத் திரித்துக் கூறுகிறார்கள். தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஒரு ஆவணத்தை அனுப்பி இருக்கின்றார். தமிழரசுக் கட்சி அதற்கு மேலதிகமாக ஆவணத்தை அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை.

நாங்கள் தமிழரசுக் கட்சியாக எந்த ஆவணத்தையும் அனுப்பவில்லை. இதனைச் சொல்லும் பொழுது நீங்கள் கேட்பீர்கள் இணையதளம் ஒன்றில் 9 பேர் கையொப்பமிட்டு தமிழ் தேசியத்துக்கான பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற கடிதத் தலைப்பு போடப்பட்டிருக்கிறது. அப்படி ஒரு அமைப்பு இருப்பதாக தெரியாது அவ்வாறு அமைப்பு ஒரு காலமும் உருவாக்கப்படவில்லை.

அதில் கைச்சாத்திட்ட நபர்களாக சொல்லப்படுகின்றவர்கள் அதற்கு முதல்நாளே நாங்கள் அப்படி ஒன்றும் அனுப்பவில்லை என அறிக்கைகளை வெளியிட்டு இருக்கின்றார்கள். அதனால் இணையத்தில் வெளிவந்த ஆவணங்களின் உண்மை தன்மை எங்களுக்குத் தெரியாது.

ஒரு பாராளுமன்ற உறுப்பினருடைய கையெழுத்தை வேறு மாதிரியாக பிரயோகிப்பது என்பது மிக மோசமான குற்றவியல் செயல். இதனுடைய உண்மை தெரியாமல் நாங்கள் எதுவும் கூற முடியாது. பாராளுமன்ற உறுப்பினர்கள் என கூறிக்கொண்டு பாராளுமன்ற உறுப்பினராக இல்லாதவர்களின் பெயர்களும் அந்த ஆவணத்தில் இருக்கின்றன . உள்ளூராட்சி சபை உறுப்பினரின் பெயர், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பெயர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பெயரென உள்ளது. இது உண்மையா என்பது எங்களுக்கு தெரியாது.

சர்வதேச சமூகம் எங்களுடன் நிற்பதற்கான முக்கிய காரணம் அரசாங்கத்தை போல நாங்கள் நடந்து கொள்ளவில்லை. நாங்கள் நியாயமானதையே கேட்கின்றோம். அரசாங்கம் பச்சை பொய் சொல்கிறது என்பது தெரிந்த விடயம் என்று சொல்லி தப்ப முடியாது. அந்த நேரத்தில் இராணுவ தளபதியாக இருந்த சரத் பொன்சேகா இன்றைக்கும் எல்லா இடத்திலும் வெளிப்படையாக சர்வதேச விசாரணையை வையுங்கள் என்றும் அதற்கு நான் முகம் கொடுக்கத் தயார் என்கிறார்.

அரசாங்கம் கொடுமையாக செயற்பட்டு மக்களை அழித்து மக்களுக்கு எதிராக பல குற்றங்களைப் புரிந்துவிட்டு பொதுமக்கள் உயிரிழக்கவில்லை எனக் கூறியாது..சர்வதேசத்தின் முன்பு அவர்கள் முகத்தை காட்ட முடியுமா? நாங்கள் அவ்வாறு இல்லையே. நாங்கள் சொல்வது நாங்கள் கூறுவது நியாயமானது.

பாதுகாப்பு சபையில் இலங்கை சம்பந்தமாக ஒரு விடயம் எடுக்கப்பட்டு இருந்தது. இது சில பத்திரிகைகளில் வெளிவந்தது. இறுதியாக நடந்த பாதுகாப்பு சபை கூட்டத்தில் இலங்கை சம்பந்தமாக ஒரு கரிசனை எழுப்பப்பட்டது.ஆகவே படிப்படியாக அனைத்தும் நடைபெறும் என்றார்.

## கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த


கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்சவம் 15 பணியாளர்களுடன் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருந்த நிலையில் அதன் பின்னர் நடைபெற்ற கோவில் நிர்வாகத்தினரின் கூட்டத்தில் நாட்டில் நிலவும் கொரோனா தொற்று காரணமான சுகாதார நிலையினை கருததிற்கொண்டு எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் ஆலயத்தின் திருவிழாவை நாடாத்துவதில்லையென முடிவு எட்டப்பட்டுள்ளதாக ஆலய தலைவரும் வண்ணக்குருமாகிய பூபாலபிள்ளை சுரேந்திரராஜா தெரிவித்துள்ளார்.

நாட்டில் தொடர்ந்து நிலவிவரும் கொரோனா தொற்று காரணமாக நாடு பூராகவும் ஊரடங்கு சட்டம் நடைமுறையில் உள்ள நிலையில் கடந்த (08) திகதி ஆலயத்தின் மகோற்சவ பூசைகள் 15 பணியாளர்களை மாத்திரம் அனுமதிக்கப்பட்டு தேரோட்ட பெருவிழா நடைபெறாமல் சாதாரண பூசைகளுடன் நடைபெற இருந்த நிலையில் மேற்படி அறிவிப்பானது ஆலய நிர்வாகத்தினரால் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை மட்டக்களப்பில் சில ஆலயங்களில் மட்டும் படுத்தப்பட்ட அளவு பக்தர்களுடன் திருவிழாக்கள் நடைபெற்றும் இறுதிக்கட்டத்தில் பக்தர்களின் வருகை அதிகரித்ததனால் ஆலய நிர்வாகத்தினர் நீதிமன்றம் வரை செல்ல வேண்டியேற்பட்டதனையெல்லாம் எம்மால் கண்டுகொள்ள முடிந்தமையினால் இவ்வாண்டுக்குரிய கிரியைகளுடன் எதிர்வரும் ஆண்டில் ஆலய திருவிழாவினை தான்தோன்றீஸ்வரப்பெருமானின் அருளாசியோடு நடத்துவோம் என இவ் ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட ஆலய செயலாளரும் வண்ணக்குருமாகிய இளையதம்பி சாந்தலிங்கம் தெரிவித்தார்.




# கிழக்கிலிருந்து நியூஸிலாந்திற்குச் சென்ற கத்தி



▶ சக்தி

**சீனா** தேசம் சென்றாயினும் சீர் கல்வி பெற வேண்டும் என கிராமங்களில் சொல்வது வழுங்கம். சீனா அல்ல எந்த நாடுகளுக்குச் சென்றாலும் தாம் கற்ற கல்வியை கற்க கசட கற்றவை கற்றபின் நிற்க அதற்கு தக என வள்ளுவப் பெருந்தகையின் கூற்றுக்கிணங்க ஒழுகவேண்டும். இல்லையேல் அவ்வாறு செயற்படவில்லையாயின், தான் கற்ற கல்வி, பொன், பொருள் அனையையும் பின்தள்ளி உயிரையே மாய்த்துக் கொள்ளும் அளவிற்குச் சென்றுவிடும். அவ்வாறாக உலகையே ஒருகணம் திரும்பிப் பார்க்கச் செய்த சம்பவம் ஒன்று அண்மையில் பதிவாகியிருந்தது அதனையே இக்கட்டுரையில் புலனாகின்றது.

நியூசிலாந்தின் ஆக்லாந்திலுள்ள அங்காடி ஒன்றில் மக்கள் மீது தாக்குதலை நடத்திய ஒருவர் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நியூசிலாந்திலுள்ள பிரபல சுப்பர் மார்கெட் ஒன்றுக்குள் கடந்த 03.09.2021 அன்று கத்திக் குத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில் ஆறு பேர் காயம் அடைந்திருந்தனர்.

ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பை சேர்ந்த இலங்கை காத்தான்குடியைச் சேர்ந்த ஒருவரே இந்த தாக்குதல் மேற்கொண்ட நிலையில், பொலிஸாரினால் குறித்த நபர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கத்திக்குத்து சம்பவத்தை தொடர்ந்து பெரும் பதற்ற நிலை காணப்பட்டிருந்தது. என சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்திருந்தனர்.

கத்திக்குத்து காயத்துடன் ஒருவர் நிலத்தில் விழுந்து கிடைப்பதை நேரில் பார்த்தேன் என அவர் தெரிவித்திருந்தார். வணிக வளாகத்திலிருந்து பொது மக்கள் தப்பி வெளியே ஓடுவதைக் காண்பிக்கும் படங்கள் சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

குறித்த இலங்கையர் 2011ஆம் ஆண்டு நியூசிலாந்தில் தஞ்சம் அடைந்துள்ளதாக அந்நாட்டு பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன் தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்தின் ஒக்லாந்தில் உள்ள பல்பொருள் அங்காடியில், இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த ஒருவரால் கத்தி தாக்குதல் நடத்தப்பட்டதை அடுத்து, இந்த சம்பவம் குறித்து நியூசிலாந்து அதிகாரிகளிடம் இருந்து கூடுதல் தகவல்கள் கோரப்பட்டுள்ளதாக இலங்கை வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நியூசிலாந்து அதிகாரிகள் இந்த சம்பவம் குறித்த விவரங்களை இன்னும் தெரிவிக்காததால், இந்த சம்பவம் குறித்த கூடுதல் தகவலுக்காக காத்திருப்பதாக வெளியுறவு அமைச்சக செயலாளர் அட்மிரல் ஜெயந்த கொலம்பகே தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் குறித்த நியூசிலாந்து புலனாய்வாளர்களின் விசாரணைகளுக்கு தேவையான உதவிகளை வழங்க இலங்கை அதிகாரிகள் தயாராக இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

நியூசிலாந்தில் ஒக்லாந்திலுள்ள விற்பனை நிலையமொன்றில் மக்கள் மீது தாக்குதல் நடாத்திய நிலையில் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டவர் இலங்கை காத்தான்குடியைச் சேர்ந்த 31 வயதுடைய முகமது சம்சூதீன் ஆதில் என அரச புனலாய்வு துறையினரால் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அவர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டவர் இலங்கை சேர்ந்தவர் எனவும் ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகளுடன் தொடர்புபட்டவர் என அந்த நாட்டு பிரதமர் அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் இவர் தொடர்பாகக் குற்றப் புலனாய்வு பிரிவினர் மற்றும் அரச புலனாய்வு பிரிவினர் மேற்கொண்ட விசாரணையில் இவர் காத்தான்குடியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டார்.


காத்தான்குடி கபூர் கடை வீதியைச் சேர்ந்த அதிபரான சம்சூதீன் முகமது இஸ்மாயில் சரிதா தம்பதிகளுக்கு 1989ஆம் ஆண்டு கடைசி மகனான பிறந்த முகமது சம்சூதீன் ஆதில், ஒரு சகோதரியும் 2 சகோதரன் உட்பட 4 பேரைக் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்.

ஆதில் ஆரம்பக் கல்வியை மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் பயின்று வந்துள்ள நிலையில் நாட்டில் ஏற்பட்ட யுத்த காரணமாக குடும்பத்துடன் 1998ஆம் ஆண்டு ஆதிலுக்கு 8 வயதில் இருக்கும் போது இடம்பெயர்ந்து கொழும்பு மொரட்டுவையில் தங்கியிருந்து வாழ்ந்து வந்துள்ளனர்.

இந்த நிலையில் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் க.பொ.த உயர்தரம் கல்வி கற்று 2006ஆம் ஆண்டு பரீட்சை எழுதிய பின்னர் 2011ஆம் ஆண்டு நியூசிலாந்திற்குச் சென்று குடியேறியுள்ளார்.

இவரின் தந்தையார் மாளிகாவத்தை அல் ஹிதாய பாடசாலையில் 2008 ஓய்வு பெறும் வரை அந்த பாடசாலை அதிபராக கடமையாற்றி வந்து நிலையில்

> **எவர் ஒருவராயினும் தாம் கற்ற கல்வியை முறையாகப் பின்பற்றி ஒழுகினால் அது அவரை ஒருபோதும் வன்முறைகளுக்குள் தள்ளாது என்பது திண்ணம். இலங்கையிலிருந்து கடல்கடந்து சென்று எவராயினும் நற்காரியங்கள் செய்தாலும், தீய செயலை மேற்கொண்டாலும், அது இலங்கை நாட்டையே பாதிக்கும் காத்தான்குடியை சேர்ந்த சம்சுதீனை அவர் சார்ந்த சூழலும், சமூகமும் நல்வழிப்படுத்தியிருக்க வேண்டும், ஒருவரது செயற்பாடுகள் திசைமாறிப்போகின்றது என்றால் அதனை அவரது குடும்பம், அவர்சார்ந்த சமூகம், என்பன நல்வழிப்படுத்தலில் பங்கு வகிக்கவேண்டும். அப்போதுதான் தனிமனித மாற்றம் சமூக மாற்றமாக மாறும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.**



அவரது மகள் கனடாவில் குடியேறி வாழ்ந்து வருவதுடன், அவருடன் கனடாவிற்குச் சென்று குடியேறி வாழ்ந்து வருகின்றார்.

அதேவேளை ஒரு சகோதரன் கட்டாரில் திருமணம் முடித்து வாழ்ந்து வருதாகவும், அடுத்த சகோதரன் சவூதியில் இருப்பதாகவும், கொலன்னாவையில் உள்ள ஆதில் தாயார் சொந்த வீட்டை வாடகைக்குத் கொடுத்துவிட்டு தமது காத்தான்குடி கபூர் கடை வீதியிலுள்ள வீட்டில் வசித்து வருகின்றார் எனவும் தெரியவருகிறது. இந்த நிலையில் குடும்பத்தில் கடைசிப் பிள்ளையான முகமது சம்சூதீன் ஆதில் நியூசிலாந்தில் குடியேறிய பின்னர் அவர் அங்கு பல்வேறு குற்றச் செயல் காரணமாக பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் அவர் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளுடன் தொடர்பை ஏற்படுத்தி வந்துள்ளதை நியூசிலாந்து பொலிஸார் கண்டுபிடித்து அவரை பின் தொடர்ந்த நிலையில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக அரச புலனாய்வு பிரிவினர் மற்றும் காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றதாக அவர் தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்து சுப்பர் மார்க்கெட் வளாகத்தில் 6 பேர் மீது கத்துக்குத்து தாக்குதல் மேற்கொண்ட இலங்கையர் தொடர்பில் மேலும் சில தகவல்கள் வெளியாகியுள்ளது. ஐஸ் பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடைய மொஹமட் சம்சுதின் என்ற 32 வயதுடைய இலங்கையர், இலங்கைக்கு வருகைத்தந்து தாக்குதல் மேற்கொள்ளவிருந்தார் என தகவல் வெளியாகியுள்ளது. இலங்கையில் தங்கியிருக்கும் நியூசிலாந்து நாட்டவர்கள் மீதே தாக்குதல் மேற்கொள்ள அவர் திட்டமிட்டிருந்தார் என நியூசிலாந்து புலனாய்வு பிரிவு கண்டுபிடித்துள்ளதாக இலங்கையின் திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அவரது பேஸ்புக் பக்கத்தின் ஊடாக இந்த திட்டம் தொடர்பில் தகவல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள நியூசிலாந்து நாட்டவர்களுக்கு பாடம் ஒன்றை கற்பிக்க அவ்வாறு செய்ய வேண்டும் என்ற பயங்கரவாத மனநிலைமையுடன் அவர் இருந்தார் என அவரது கருத்துக்களில் உறுதியாகியுள்ளது. அவருக்கு நெருக்கமான பலர் நியூசிலாந்து அல்லது இலங்கையில் இருக்க கூடும் என சந்தேகிக்கப்பதாக அந்த செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனக்கு ஐஎஸ் அமைப்பில் சேர தடை விதித்தால் சாலையில் இறங்கி கத்தியால் குத்தி யாரையாவது கொல்வேன் என நியூசிலாந்தில் தீவிரவாத தாக்குதல் நடத்திய அஹமது ஆதில் முகமது சம்சுதீன் தெரிவித்ததாக அவருடன் வசித்த நபர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் ஆக்லாந்தில் 201%இல் சம்சுதீனுடன் ஒரே அடுக்குமாடி வீட்டில் வசித்த நபரிடம் தேசிய பாதுகாப்பு புலனாய்வுக் குழுவின் அதிகாரிகள் விசாரணை நடத்தியிருக்கின்றனர். விசாரணையில் பல்வேறு தகவல்கள் வெளியாகியுள்ளன.

நான் கடந்த 2017 இல் பல மாதங்கள் அவருடன் சேர்ந்து தங்கியிருந்தேன். சிரியாவுக்கு எப்படி பயணம் செய்வது மற்றும் அது தொடர்பாக உதவ ஆட்களை எனக்கு தெரியுமா என அடிக்கடி சம்சுதீன் கேட்பார்.

மேலும் என்னை வெளிநாட்டுக்கு அனுப்பி ஐ.எஸ் இயக்கத்தில் சேர தடை போட்டால் சாலையில் இறங்கி கத்தியால் குத்தி யாரையாவது கொல்வேன், எனக்கு வெடிகுண்டு எப்படி தயாரிக்க வேண்டும் என்பது கூட தெரியும் என கூறினார்.

இதோடு, இங்கேயே முடிந்தவரை சேதத்தை ஏற்படுத்த முயற்சிப்பேன் என என்னிடம் சொன்னார்.

அதற்கு நான் சம்சுதீனிடம், உன் செயலால் அப்பாவி மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்று கேட்டதற்கு, நியூசிலாந்தில் வாழும் அனைத்து மக்களும் டுத ஹூஹூச்ஹூ [நம்பிக்கை இல்லாதவர்கள் மற்றும் அவதூறு பேசுபவர்கள் என பொருள்] என என்னிடம் கூறினார். ஒரு முறை சம்சுதீனின் படுக்கைக்கு அடியில் பெரிய கத்தி இருப்பதை கண்டேன். அந்த காட்சியை கண்ட பின்னர் அவர் என்னை கொன்று விடுவார் என பயம் ஏற்பட்டது.

இதன்பிறகு தூங்கும் போதும் ஒரு கண்ணை திறந்து கொண்டே இருப்பேன். என் பெரும்பாலான நேரத்தை வீட்டுக்கு வெளியேதான் செலவழிப்பேன் என கூறினார். இதற்கு பின்னர் சம்சுதீன் மீது கொண்ட அச்சத்தால் வீட்டை காலி செய்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

எவர் ஒருவராயினும் தாம் கற்ற கல்வியை முறையாகப் பின்பற்றி ஒழுகினால் அது அவரை ஒருபோதும் வன்முறைகளுக்குள் தள்ளாது என்பது திண்ணம். இலங்கையிலிருந்து கடல்கடந்து சென்று எவராயினும் நற்காரியங்கள் செய்தாலும், தீய செயலை மேற்கொண்டாலும், அது இலங்கை நாட்டையே பாதிக்கும் காத்தான்குடியை சேர்ந்த சம்சுதீனை அவர் சார்ந்த சூழலும், சமூகமும் நல்வழிப்படுத்தியிருக்க வேண்டும், ஒருவரது செயற்பாடுகள் திசைமாறிப் போகின்றது என்றால் அதனை அவரது குடும்பம், அவர்சார்ந்த சமூகம், என்பன நல்வழிப்படுத்தலில் பங்கு வகிக்கவேண்டும். அப்போதுதான் தனிமனித மாற்றம் சமூக மாற்றமாக மாறும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.



Sj
SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப் பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக நகைத் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல் பெயர் பெண்டன், மற்றும் அனைத்து நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன் செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
Tel : 044 2410241
Fax : 044 2410245
sikaramgmbh@gmail.com / www.sikaram.com


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


SwissLife
Select
சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே, அவதானமாகச் செயற்படுங்கள். உங்கள் கடனுக்கான வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்க கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும் ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


Allegrotto Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch
Seela Food Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில் நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt

# மட்டக்களப்பில் டெல்டா தொற்று காவி பரவுவதற்கான சூழ்நிலையை இலங்கையரசாங்கமே உருவாக்கியது

(துறையூர் சஞ்சயன் )

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெல்டா தொற்று காவி பரவுவதற்கான சூழ்நிலையை இலங்கையரசாங்கமே உருவாக்கியது என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பத்மநாபா மன்றத் தலைவரும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான இரா.துரைரெட்ணம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வாவிக்கரை வீதியில் அமைந்துள்ள ஈ.பி.ஆர்.எல்.எப் பத்மநாபா மன்ற காரியாலயத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

கொரோனா தொற்றுநோய் தொடர்பாக மேலைத்தேய நாடுகளின் செயற்பாடென்பது அரசியல் கலப்படமில்லாத சர்வதேச சுகாதார பொறிமுறைக்கும் அந்நாட்டின் சுகாதார விதிமுறைகளுக்கும் கட்டுப்பட்டதாகவே முன்னெடுக்கப்பட்டது. ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை அரசியல் ரீதியான செயற்பாடுகளால் கொரோனா தொற்றுப் பரவலை காரணம் காட்டி பொது மக்களை எப்படி பீதியடைய வைப்பது, எப்படி பயன்படுத்துவது என்ற அரசியல் கலந்ததான கொரோனா செயற்பாடுகளே இடம்பெறுகிறது.

சர்வதேச ரீதியான சுகாதார அமைப்புகள் இலங்கையில் கொரோனா தொற்றுநோய் 25,000 க்கு மேற்பட்ட மக்களை காவு கொள்ளும். இது தொடர்ச்சியாக பரவும் என்று அறிவித்திருந்தும், இலங்கையரசாங்கம் சுகாதாரம் தொடர்பானவர்களின் கருத்துக்களை உதறித்தள்ளிவிட்டு வெறும் அரசியல் ரீதியான நிறுவனங்களை பயன்படுத்த எந்தனித்ததன் வெளிப்பாடே மட்டக்களப்பு மாவட்டத்திற்கு டெல்டா தொற்று பரவுவதற்கு அடிப்படையாக இருந்தது.

பொதுவான கூட்டங்கள், செயலமர்வுகள், கருத்தரங்குகள் செய்ய வேண்டாமென அரசாங்கம் கொரோனா விதிகளை முன்வைத்த நிலைமையில் ஆளுநர் இயற்கை உரம் தயாரிப்பது தொடர்பாக உத்தியோகத்தர்களுக்குரிய செயலமர்வை ஒழுங்கு செய்திருந்தால் இடைநிறுத்தியிருக் வேண்டும். அதை விடுத்து மட்டக்களப்பு சந்துருக்கொண்டானில் ஐந்து நாள் கருத்தரங்கை நடாத்தி, 150 க்கு மேற்பட்ட கமநல சேவைகள் நிலைய உத்தியோகத்தர்களுக்கும் அவர்களது குடும்ப உறவுகளுக்கும் தொற்று நோயைப் பரப்பிய பொறுப்பு ஆளுநரேயே சாரும்.




இவ்வாறான ஆளுநருக்கு எதிராக அரசாங்கம் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை.

மத்தியரசாங்கத்தின் கீழ் செயற்படும் ஆளுநர் அலுவலக நிர்வாகம் அரச இயந்திரத்தில் ஒன்று என்பதை ஆளுநர் மறந்து செயற்படுவதாகவே தெரிகிறது. வேறு யாரும் சாதாரண மனிதனென்றால் கைது செய்திருப்பீர்கள், பிடித்திருப்பீர்கள். முதல் ஆளுநருக்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு அப்பால், மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் குறிப்பிட்ட காலமாக சுகாதார பிரிவைச் சேர்ந்தவர்களும் ஏனைய சுகாதாரம் தொடர்பான அரச நிர்வாகமும் மிகவும் அர்ப்பணிப்புடன் உயிரை துச்சமாக மதித்து கொரோனா சிகிச்சை விடயத்தில் செயற்படுவதென்பது பாராட்டுக்குரியது.

# நீதியை பெற்றுக் கொடுக்க முஸ்லிம் தலைமைகள் தவறுகின்றார்களா?

(ஹஸ்பர் ஏ ஹலீம்)




அண்மைய காலங்களாக எந்த ஒரு அடிப்படையும் இன்றி அரசியல் காரணங்களுக்காக திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட கலவரங்களால் அநியாயமாக பாதிக்கப்பட்டு தமது சொத்துக்களையும், பொருளாதாரத்தையும், உயிர்களையும் இழந்தவர்களுக்கு உரிய நீதியை பெற்றுக் கொடுக்க முஸ்லீம் தலைவர்கள் ஏன் நடவடிக்கை எடுக்க வில்லை என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மூதூர் தொகுதிக்கான கொள்கை பரப்புச் செயலாளரும் கிண்ணியா நகர சபை உறுப்பினருமான எம். எம். மஹ்தி கேள்வி எழுப்பியுள்ளார். இலங்கை வரலாற்றில் காலம் காலமாக பல்வேறு திட்டமிட்ட அழிவுகளுக்கு அநியாயமாக முகம்கொடுத்து வருகின்ற முஸ்லிம் சமூகம் தமது பொருளாதாரத்தை, உயிர்களை, சொத்துக்களை இழந்து கொண்டே வருகின்றார்கள்.

அவ்வாறான இழப்புகளுக்கு முகம் கொடுப்பவர்களுக்கு அவர்களது வாக்குகளால் தெரிவு செய்யப்படுகின்ற அரசியல் தலைமைகள், பாராளுமன்ற பிரதி நிதிகள் நியாயமான நீதியையும் இழப்பீடுகளையும் பெற்றுக் கொடுக்க தவறி வருகின்றனர்.

அந்த அடிப்படையில் அண்மை காலங்களில் அம்பாறை கருத்தடை கொத்து, கண்டி- திகன பிரச்சினை, ஈஸ்டர் தாக்குதலை தொடர்ந்து அரங்கேற்றப்பட்ட பேரழிவுகள், வைத்தியர் சாபியினது சம்பவம் போன்றவற்றில் திட்டமிட்ட அடிப்படையில் முஸ்லீம்களுக்கு எதிராக அநியாயக் கலவரங்களை வன்முறையாளர்கள் அரங்கேற்றினர்.

அக் கலவரங்களால் பாதிக்கப்பட்ட முஸ்லீம் சமூகத்திற்குக்கு உரிய நீதியையும் அவற்றுக்கான இழப்பீடுகளையும் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அது முடியாத போது ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் கவனத்திற்கேனும் கொண்டு செல்ல வேண்டும் எனவும் கட்சித் தலைவர்களையும் அரசோடு இணக்க அரசியலை செய்து வருகின்ற பாராளுமன்ற பிரதிநிதிகளையும் கேட்டுக்கொள்கின்றேன்.

# ஊருக்குள் வந்த காட்டு யானைகள்



(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு- செங்கலடி நகரை அண்மித்த பிரதேசத்திலுள்ள கறுத்த பாலம் மற்றும் பொது மயானம் ஆகிய பகுதிக்குள் காட்டு யானைக் கூட்டமொன்று நேற்று மாலை படையெடுத்துள்ளது.

பொதுமக்கள் வீதியோரம் கூடிநின்ற இவற்றைப் பார்வையிட்டனர்.

கொரோனா அச்சுறுத்தல் இருப்பதனால் குடியிருப்புக்களிலிருந்து மனிதர்கள் வெளியேறக்கூடாது என்ற நோக்குடன் ஊரடங்குச்சட்டம் அமுல்செய்யப்பட்டுள்ள நிலையில் காட்டு யானைகள் நகர பகுதிகளுக்குப் படையெடுத்துள்ளமை அவதானிக்கப்பட்டது.

செங்கலடி கறுத்தப்பாலத்தை அண்மித்த பற்றைக்காட்டுப்பகுதிக்குள் படையெடுத்த காட்டு யானைக் கூட்டத்தினை வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகள் யானை வெடிகளைப்போட்டு விரட்டியடித்தனர்.

கிழக்கு மாகாணத்தில் தற்போது வரட்சியான காலநிலை காணப்படுவதனால் குடிநீர் மற்றும் உணவுகளைத்தேடி இந்த யானைகள் வந்திருக்கலாமென நம்பப்படுகிறது

எனினும் அண்மித்துள்ள குடியிருப்புப் பகுதிக்குள் யானைகள் ஊடுருவலாமென்ற அச்சம் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

# யுனிசெப்பினால் சுகாதார ஊழியர்களுக்கு கொரோனா கட்டுப்பாட்டு உபகரணங்கள் வழங்கி வைப்பு




(நூருள் ஹுதா உமர், பாரூக் சிஹான், எம்.என்.எம். அப்ராஸ்)

கிழக்கு மாகாணத்தில் பரவலாக அதிகரித்துவரும் கொரோணாஅலையை கட்டுப்படுத்தும் நோக்கில் யுனிசெப் நிறுவனத்தினால் முன்களப் பணியாளர்களாக கடமையாற்றும் சுகாதார ஊழியர்களுக்கு தேவையான ஒரு தொகை பாதுகாப்பு உபகரணங்கள்

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜி சுகுணனின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய பணிமனைக்குட்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினருக்கு இந்த பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

முகக்கவசம், முகத்திரை, பி.பி.ஈ. பாதுகாப்பு அங்கிகள், தொற்றுநீக்கி (சனிடைசர்), உட்பட பல்வேறு பாதுகாப்பு உபகரணங்களை கொண்ட பொதிகளை சுகாதார வைத்திய அதிகாரிகளிடம் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜி சுகுணன் இதன்போது வழங்கி வைத்தார். இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் டாக்டர் எம்.பி.எம். அப்துல் வாஜித், கல்முனை பிராந்திய திட்டமிடல் வைத்திய அதிகாரி டாக்டர் எம் சி மாஹிர் உட்பட சுகாதார வைத்திய அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்

# மறைத்து வைக்கப்பட்ட நெல் கண்டு பிடிப்பு

(பொன்ஆனந்தம்)

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராளவின் பணிப்புரைக்கமைய பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை மாவட்ட அலுவலத்தினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது கிண்ணியா கச்சகொடித்தீவு பிரதேசத்தில் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 50 கிலோ கிராம் நிறையுடைய 120 மூடைகள் கண்டுபிடிக்கப்பட்டதுடன் அவற்றுக்கு முத்திரை இடப்பட்டுள்ளதாக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இரகசியமாக கிடைக்கப்பெற்ற தொலைபேசி அழைப்பை அடுத்து குறித்த பிரதேசத்திற்கு பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை உத்தியோகத்தர்கள் அனுப்பப்பட்டு குறித்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது பிறிதொரு பொருட்கள் அடங்கிய களஞ்சியசாலையில் குறித்த 120 சீனி மூடைகளும் பதுக்கி வைக்கப்பட்டு இருந்ததாகவும் உரியநபருக்கு எதிராக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின்படி உரிய அதிகாரசபையால் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

கடந்த சில தினங்களாக மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட சில பொருட்கள் கட்டுப்பாட்டு விலைக்கு மேலதிகமாக விற்கப்பட்டு வருவதாக தமக்கு முறைப்பாடு பொதுமக்களால் செய்யப்பட்டுள்ளதாகவும் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை உத்தியோகத்தர்களுக்கு அவ்வாறான பிரதேசங்களை இனங்கண்டு சுற்றிவளைப்புகள் மேற்கொண்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு தாம் அறிவுறுத்தல் வழங்கியதாக இதன்போது அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

தற்போதைய சூழ்நிலையில் கையிருப்பில் பொருட்களை வைத்துக்கொண்டு அவற்றை மொத்த ,சில்லறை அடிப்படையில் விற்பனை செய்யாமல் செயற்கையான முறையில் பொருட்களுக்கு தட்டுப்பாட்டை ஏற்படுத்தி அவற்றை பதுக்கி வைத்திருப்பது அனுமதிக்க முடியாது. மக்கள் பொருளாதார அசௌகரியங்களுக்கு மத்தியில் தற்போது வாழ்ந்து வருவதாகவும் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலைக்கு பொருட்களை வழங்க வேண்டிய தேவை காணப்படுகின்றது.

இவ்வாறான சுற்றிவளைப்புகள் மாவட்டத்தினுடைய பல்வேறு பிரதேசங்களிலும் தொடராக மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் பாவனையாளர்களது நலன் தொடர்பில் கூடிய அக்கறை கொண்டு இச்செயற்பாட்டை தொடர்ச்சியாக மேற்கொள்ள திட்டமிட்டு உள்ளதாகவும் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை உத்தியோகத்தர்களுக்கு உரிய அறிவுறுத்தல் தம்மால் இது தொடர்பில் வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் இதன்போது தெரிவித்தார்.

மாவட்டத்தினுடைய ஏதாவது ஒரு பிரதேசத்தில் அறிவிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலைக்கு மேலதிகமாக பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்ற பொழுதும் அதே போன்று நெல் அளவுக்கதிகமான முறையில் பதுக்கி வைக்கப்பட்டிருப்பது அல்லது களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருப்பது தொடர்பான விபரங்கள் மக்களுக்கு தெரியுமெனின் அது குறித்து மாவட்ட செயலகத்தையோ, பிரதேச செயலகத்தையோ அல்லது பாவனையாளர்கள் அதிகாரசபையையோ தொடர்புகொண்டு குறித்த தகவல்களை வழங்குமாறு இதன் போது அரசாங்க அதிபர் மக்களிடம் வேண்டிக் கொண்டார். இன்று நடைபெற்ற குறித்த சுற்றிவளைப்பின் போது பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை மாவட்ட அலுவலக விசாரணை உத்தியோகத்தர் தனசேகரன் வசந்தசேகரன் தலைமையிலான உத்தியோகத்தர்கள் சுற்றிவளைப்பில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# முன்னேற்ற அறிக்கை தொடர்பான மீளாய்வுக் கூட்டம்

(எம்.ஐ.எம்.றியாஸ் )

அக்கரைப்பற்றில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கிழக்கு மாகாண மேலதிக மாகாண பணிப்பாளர் காரியாலயத்தில் முன்னேற்ற அறிக்கை தொடர்பான மீளாய்வுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கிழக்கு மாகாண மேலதிக மாகாண பணிப்பாளர் பொறியியலாளர் எம்.பீ.அலியார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிராமிய வீதிகள் மற்றும் உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ரஞ்சித் திசாநாயக்க பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இதன் போது கிராமிய வீதி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நெடுஞ்சாலைகளில் மரநடுகை தொடர்பாகவும், ஒவ்வொருதொகுதிக்கும் நிர்மாணிக்கும் கிராமியப் பாலங்கள் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

கிராமிய வீதிகள் மற்றும் உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ரஞ்சித் திசாநாயக்க அவர்களினால் நெடுஞ்சாலைகளிலும், அக்கரைப்பற்றில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கிழக்கு மாகாண மேலதிக மாகாண பணிப்பாளர் காரியாலயத்திலும் மரக்கன்றுகள் நடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் உயர் அதிகாரிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# தென்னங்கன்றுகளும், பயிர் விதைகளும் வழங்கல்



(எம்.ஐ.எம்.றியாஸ்)

சமூர்த்தி அருணலு வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் வீட்டுத்தோட்ட பயனாளிகளுக்கான தென்னங்கன்றுகளும், பயிர் விதைகளும் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலக தலைமைப்பீட சமூர்த்தி முகாமையாளர் எம்.ஜே.எம்.நிஹ்மத்துல்லா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் சாபீர், உதவிப்பிரதேச செயலாளர் திருமதி நஹீஜா முஸாபீர் ஆகியோர் கலந்து கொண்டு பயனாளிகளுக்கான தென்னங்கன்றுகளை இதன் போது வழங்கி வைத்தனர்.

மனைப் பொருளாதார அலகுகளை அபிவிருத்தி செய்வதற்காக அரசாங்கம் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் தேசிய வேலைத்திட்டமாக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான தென்னங்கன்றுகளும், பயிர் விதைகளும் நாட்டிலுள்ள சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சமூர்த்தி கருத்திட்ட முகாமையாளர் என்.ரி.மசூர், வங்கி முகாமையாளர் எம்.எல்.ஜாபீர், சமூர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் ஐ.யு.நபீஸா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# மஸ்கெலியாவில் கொரோனா தொற்றாளர்களுக்கான தீவிர கண்காணிப்பு பிரிவு திறப்பு



(க.கிஷாந்தன்)

மஸ்கெலியா பிரதேச வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள, கொரோனா தொற்றாளர்களுக்கான தீவிர கண்காணிப்பு பிரிவு திறந்து வைக்கப்பட்டது.

அட்டன், கொட்டகலை ரொட்டரக்ட் கழகம் மற்றும் அல்முனை மொரட்டுவ பல்கலைகழக ரொட்டரக்ட் கழகம் அனுசரணையில் இந்த கண்கானிப்பு பிரிவு புனர்நிர்மானம் செய்யப்பட்டுள்ளது. குறித்த கண்காணிப்பு பிரிவினை மஸ்கெலியா வைத்தியசாலை பொறுப்பதிகாரி எம்.ஆர்.எம் பாஹிமா தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

மஸ்கெலியா பிரதேச வைத்தியசாலையில், பல மில்லியன் ரூபா செலவில் கொரோனா தொற்றுக்குள்ளாகி பாதிக்கப்பட்டவர்கள் சுமார் 200 பேர் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுக்கொள்வதற்கான வசதிகளை அரசாங்கமும் கொடைவள்ளர்களும் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் இதில் ஒரு பகுதியாக குறித்த தீவிர கொரோனா நோயாளர் கண்காணிப்பு பிரிவு இயங்கும்.

வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி எம்.ஆர்.எம் பாஹிமா தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்வில், ரொட்டெக்ட் கழகத்தின் தலைவர் தியாகராஜா யுவராஜன் முன்னாள் தலைவி அர்ச்சனி பஞ்சாட்சரம், இணைப்புச் செயலாளர் சங்கரலிங்கம் ரூபதர்சன், டிக்கோயா வைத்தியசாலையின் வைத்தியர் அருள் குமரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# இசைத்துறையில் ஈடுபாடு எங்களின் மூன்று தலைமுறையாக பேணப்பட்டு வருகிறது





ந.குகதர்சன்

**இசைத்துறையில்** ஈடுபாடு எங்களின் மூன்று தலைமுறையாக பேணப்பட்டு வருகிறது என ஓட்டமாவடி காவத்தமுனை மில்க்கோ வீதியில் வசிக்கும் சம்மூன் குட்டி முகம்மது சரிப் தெரிவித்தார்.

அவர் தெரிவித்த அவரது இசைப்பயணம்;

எங்கட மூத்த வாப்பா, எங்கட மாமா, நானும் எனது சிறு பிராயத்தில் இருந்து அதில் ஈடுபாடு. படிப்பு என்கிற அளவுக்கு நான் பெரிதாக படித்தவன் இல்லை. எனக்கு ஆசிரியர் காதர் மாஸ்டர் காதர் சேர் ஹாஜியார் அவரிடம் நான் சொற்ப நாட்கள்தான் ஏழாம் ஆண்டு வரைதான் படித்தேன்.

மார்க்கக் கல்வியையும் அறிந்த அளவு முடிந்த அளவு கற்றுக் கொண்டேன். மற்றும் நான் நாஹூர் ஈ. எம். ஹனீபா அவர்களின் பாடல்களை கேட்டுத்தான் இம்மை மறுமை பற்றிய விடயங்களை எல்லாம் அறிந்திருக்கிறேன். அவர் எனக்கு ஒரு ஆசிரியர் போல நாஹூர் ஹனீபா ஹாஜியார்.

அடுத்து நான் சொந்த மெட்டு அமைத்து பாடல்களை இயற்றி பாடிக் கொண்டு இருக்கிறேன். இரண்டு மூன்று பாடல்கள் வானொலி சேவையிலும் ஒலிபரப்பாகி இருக்கிறது. அடுத்து எங்களுக்கான இசைக் கருவிகளை சொந்த உழைப்பு பணத்தில்தான் வாங்கியுள்ளேன். அனுபவ ரீதியான எனது கேள்வி ஞானங்களை வைத்தே இசை அமைத்து, பாடல்கள் இயற்றி பாடி வருகிறேன்.

அடுத்து நான் பிறந்தது ஓட்டமாவடியில் என்னை வளர்த்தவர்கள் வெள்ளையன் போடியார் அவர்கள். நான் அவரின் வளர்ப்பு மகன்தான். ஒரு காலத்தில் சொத்து சுகங்களுடன் செல்வ செழிப்பாக வாழ்ந்தேன். தற்போது எளிமையான வாழ்க்கையையே வாழ்கின்றேன்.

தொடர்ச்சியாக இந்த நிகழ்ச்சிகளை பிற்பகல் நேரங்களில் செய்துவருவது வழக்கம். நாஹூர் ஈ. எம். ஹனீபா அவர்களின் பாடல்களை பாடுவது மற்றும் நான் இயற்றிய பாடல்களைப் பாடுவது மற்றும் மார்க்கக் கடமையாக தொழுது, நோன்பு நோற்று எனது மருமகன் செய்து வருகிற சிறிய தொழில் முயற்சியில் நானும் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து வருகிறேன்.

இந்த கலையை ஆரம்பம் செய்ய முக்கியமாக எங்களுடைய மூன்று தலைமுறை காரணமாக இருந்தது. அடுத்த முக்கியமாக எனது நண்பர் ஒருவர் இருந்தார். அவரது பெயர் லத்தீப். அவர் ஒரு ஒஸ்தா மாமா (அந்த காலத்தில் கத்நாவை செய்து வைப்பவர்களை அழைக்கும் பெயர்). அவர் எனக்கு பல ஆலோசனைகளை வழங்கி, பல இசை சார் நுணுக்கங்களை சொல்லிக் கொடுப்பார். அவரும் ஓர் தபிலா வாசிக்கும் ஆற்றல் கொண்டவர்.



அதற்குப் பிறகு சின்னத்தம்பி ஹாஜியார் என்று ஒருவர் இருந்தார். அவரும் என்னுடன் நீண்ட காலமாக இருந்து உதவி ஒத்தாசையாக இருந்திருக்கிறார். அவர்கள் எல்லோரும்தான் என்னுடைய இந்த இசைக் கலை வளர்ச்சிக்கு பங்காளிகளாக இருந்து ஆர்வம் கொடுத்தவர்கள். எனக்கான ஆசிரியர்கள் மற்றும் நண்பர்கள் இருக்கிறார்கள். அநேகமாக ஹஸ்ரத் ஹலீம் ஹஸ்ரத் கூட என்னை அடிக்கடி 'நீங்கள் இதை சிறப்பாக செய்ய வேண்டும். இதனால் உங்களுக்கு சிறந்த ஒரு எதிர்காலம் இருக்கிறது' என்று ஆர்வமூட்டுவார். இவ்வாறாக எனக்குள் பல ஆர்வங்கள் இத்துறையில். சிறியவர்கள், இளைஞர்கள் மற்றும் முதியோர்களென எல்லோருக்கும் எனது இசைக் கலை சமூகத்திற்கு பிரயோசனமாக அமைய வேண்டும் என்பது எனது ஆசை, அவா.

இவ்வாறான பாடல்களில்
சீதனக் கொடுமை.

குடி உந்தன் குடியை கெடுக்கும் குடிக்காதே.

முஸ்லிமான ஆணுக்கும் பெண்ணுக்கும் கடமையான தொழுகை என்று இவ்வாறாக பல பாடல்களென்று நான் இயற்ற இசை அமைத்து பாடி தற்போதும் பாடிக் கொண்டும் இருக்கிறேன்.

தற்போது எனக்கு 63 வயதானது. எனக்கு 63 வயதான இந்த தருணத்தில் எனது ஒரு ஆசை எனது இந்த பாடல்களை மக்கள் மத்தியில் பாடி வெளிப்படுத்தி. நவீன தொழில்நுட்ப வசதிகளை பயன்படுத்தி ஈகை திருநாள் பெருநாள் காலங்களில் மக்கள் மத்தியில் நான் இதைப் பாடி கொண்டு சேர்க்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

எத்தனையாவது ஆண்டு எத்தனையாவது வயதில் இதில் ஆர்வம் எனக்கு ஏற்பட்டது என்று என்னால் சரியாக கூற முடியவில்லை. ஆனால் சிறு பிராயத்தில் இருந்தே ஒரு பத்து வயது அவ்வாறான காலங்களில் இருந்து இவ்வாறு பாடல்களை பாடுவதற்கு எனக்கு கொஞ்சம் ஆர்வமாக பாடுவேன்.

அநேகமாக சினிமா பாடல்கள், நாஹூர் ஈ. எம். ஹனீபா அவர்களின் பாடல்களை பாடுவேன். மற்றும் அதிகமாக தமிழ் பாடல்களை அதன் ரசனைக்கு ஏற்றவாறு பாடுவேன். என்னுடன் ஆரம்ப காலத்தில் பல கலைஞர்கள் இருந்திருக்கிறார்கள் அவர்களில் 7 அல்லது 8 பேர் மரணம் அடைந்து விட்டார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். மீதி உள்ளவர்கள் இருக்கிறார்கள். தற்போது என்னுடன் நான்கு கலைஞர்கள் இருந்திருக்கிறார்கள் என்னுடன் சேர்த்து ஐந்து பேர் தபலா வாத்தியம் இசைக்க இருவர் பக்க வாத்தியம் வழங்க இருவர் இவ்வாறாக நாங்கள் ஒரு ஐந்து பேர் கொண்ட ஒரு குழுவாக இந்த நிகழ்ச்சிகளை செய்து வருகிறோம்.

இவ்வாறான கலைஞர்களை சமூகத்தில் அறிமுகம் செய்து ஆர்வமூட்டல் வேண்டும்.





# ஜீவன் தொண்டமானின் தமிழ்நாடு விஜயம்



**தலவாக்கலை பி.கேதீஸ்**

தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான் தென்னிந்திய தமிழ்நாட்டுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு அங்கு தமிழ்நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸிடாலின் உள்ளிட்ட முக்கிய தலைவர்களை சந்தித்துள்ளார். இந்த சந்திப்பில் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து தமிழ்நாட்டில் முகாம்களில் வாழும் தமிழர்கள் தொடர்பாகவும், மலையக இந்திய வம்சாவளி சமூகத்தின் கல்வி,உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் இம்மக்களின் வாழ்வியல் நிலை குறித்து முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபக தலைவர் அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமான் இந்திய தமிழ்நாட்டு அரச தலைவர்களுடன் பேணி வந்த நட்பை, இவரின் மறைவையடுத்து காங்கிரஸின் பொறுப்புகளை ஏற்று வழிநடத்தி வந்த அமரர் ஆறுமுகன் தொண்டமான் புதுப்பித்திருந்தார். இந்த நிலையில் அமரர் ஆறுமுகன் தொண்டமானின் மறைவையடுத்து தற்போது இலங்கை தொழிலாளர்கள் காங்கிரஸின் செயலாளராக பொறுப்புகளை ஏற்று வழிநடத்தி வரும் அமரர் ஆறுமுகன் தொண்டமானின் புதல்வரான ஜீவன் தொண்டமான் இலங்கையின் இராஜாங்க அமைச்சர் என்ற தனது பதவியோடு தமிழ்நாட்டுக்கு விஜயத்தை மேற்கொண்டு அங்கு ஆட்சியிலுள்ள தலைவர்களை நேரடியாக சந்தித்து அவர்களுக்கிடையிலான உறவுகளை புதுபித்து கலந்துரையாடலையும் நடத்தியுள்ளார்.

இவ்வாறு இடம்பெற்றுள்ள கலந்துரையாடலில் ஈடுப்பட்ட இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தமிழ் நாட்டின் சட்டமன்ற தலைவர்களுடன் இந்தியாவின் தொப்புள் கொடி உறவுகளான மலையக மக்களை வழிநடத்தும் பிரதிநிதியாக பல்வேறு விடயங்களை முன்வைத்துள்ளார்.அந்த வகையில் தமிழ்நாட்டிற்கும் இலங்கை மலையக பிரதேச இந்திய வம்சாவளி மக்கள் மற்றும் புலம்பெயருந்து தமிழ்நாட்டில் முகாம்களில் வாழும் மக்களுக்கு இடையிலான பரஸ்பர உறவுகள் தொடர்பாகவும் விசேடமாக கலந்துரையாடல் நடத்தியுள்ளார்.இதன்போது மலையக மக்களுக்கான அபிவிருத்திகள்,உட்கட்டமைப்பு வசதிகள்,கல்வி மேம்;பாட்டுக்கான உதவிகள்,மற்றும் நுவரெலியா மாவட்டத்தில் அமையவுள்ள பல்கலைகழகத்திற்கான இந்திய அரசாங்கத்தின் உதவி மற்றும், உறவுகள் என பல விடங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுடான சந்திப்பு

அந்த வகையில் தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உடன் இடம்பெற்ற முக்கிய சந்திப்பில் தமிழ்நாட்டிற்கும், இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்கள் செரிந்துவாழும் மலையகத்திற்கும் இடையிலான இருதரப்பு பரஸ்பர உறவுகள் தொடர்பாக பேசப்பட்டுள்ளதுடன், தமிழ்நாட்டு முதலமைச்சராக சரித்திர வெற்றி பெற்ற மு.க.ஸ்டாலினுக்கு வாழ்த்துக்களை தெரிவித்து கொண்டதுடன், இலங்கையிலிருந்து தமிழ்நாட்டுக்கு புலம்பெயர்ந்து அங்கு முகாம்களில் தங்கிவாழும் இலங்கை தமிழ் மக்களின் நலத்திட்டத்திற்கென 31% கோடி ரூபா நிதியொதுக்கி அதில் நலத்திட்டங்களை முன்னெடுக்க உள்ளமைக்கு நன்றிகளையும்,வாழ்த்துக்களையும் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார். அத்துடன் மலையகத்திற்கான அபிவிருத்திகள் தொடர்பாகவும் மலையக மக்கள் வாழ்வியல் மற்றும் அபிவிருத்திகள் தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது. மேலும் நீண்ட நாள் அரசியல் போராட்டங்களுக்கு மத்தியில் இலங்கையில் மலையகத்திற்கான தனியான பல்கலைகழகம் அமைப்பதற்கான அனுமதியை இலங்கை அரசாங்கம் வழங்கியுள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார். அத்துடன் இலங்கையின் மலையகத்தில் அமையவுள்ள பல்கலைகழகத்திற்கும், தமிழ்நாட்டின் அரசாங்கத்திற்கும் உறவை வளர்த்துக்கொள்வது தொடர்பாக விரிவாக கலந்துரையாடியுள்ளார்.அத்துடன் புலம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு தமிழ்நாட்டு அரசு முன்னெடுக்கும் நலத்திட்டங்கள் தொடர்பில் இலங்கை அரசுக்கும் பரிந்துரைப்பதாகவும், இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தமிழ் நாட்டு முதலமைச்சரிடம் தெரிவித்துள்ளார்.மேலும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மறைந்த தலைவர்களான அமரர் சௌமியமுர்த்தி தொண்டமான், அமரர் ஆறுமுகன் தொண்டமான் ஆகியோர், தமிழ் நாட்டின் திராவிட முன்னேற்ற கழகத்தின் மறைந்த தலைவர் கலைஞர் முத்துவேல் கருணாநிதியுடன் பேணி வந்த உறவு மற்றும் தற்போதைய முதலமைச்சர் மாண்புமிகு மு.கா.ஸ்டாலினுடன் பேணி வரும் நெருக்கமான உறவு தொடர்பில் இச் சந்திப்பில் கலந்துரையாடியுள்ளார். அதேநேரத்தில் இந்திய வம்சாவளி மக்களை பிரதிநிதிப்படுத்தும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸிற்கும்



திராவிட முன்னேற்ற கழகத்திற்குமிடையிலான உறவு நீடிக்கும் எனவும் நம்பிக்கை தெரிவித்துள்ளதாகவும், இதன் மூலம் இந்திய அரசாங்கத்தின் மூலம் பல்வேறு அபிவிருத்திகள் மலையக மக்களுக்கு வந்தடையும் என நம்பிக்கை பிறந்துள்ளதாகவும் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

## சட்டமன்ற அமைச்சர் கே.எஸ்.அழகிரி ஊடான சந்திப்பு

இந்த சந்திப்பு மரியாதை நிமிர்தமாக சென்னை நந்தனத்தில் கே.எஸ்.அழகிரியின் வீட்டில் குழுவினருடன் சுமார் ஒரு மணிநேரம் இடம்பெற்றுள்ளது. இதன்போது பாரதத்தின் முன்னாள் பிரதமர் அமரர் ராஜீவ்காந்தி அவர்கள் இலங்கை தமிழர்களுக்கு முன்னெடுத்திருந்த நலத்திட்டங்கள் குறித்த விடயங்கள் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மறைந்த தலைவர்களுக்கும் கே.எஸ்.அழகிரி குடும்பத்தாருக்கும் இடையில் உள்ள குடும்ப உறவுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

## பள்ளி கல்வி மேன்பாட்டு அமைச்சர் மகேஷ் ஊடான சந்திப்பு

இந்த கலந்துரையாடலின் போது இலங்கையில் மலையகத்திற்கான தனியான பல்கலைகழகம் அமைக்கப்படவுள்ளமை தொடர்பாகவும்,மலையகத்தின் கல்வி அபிவிருத்திகள் தொடர்பாகவும் தமிழ்நாட்டு கல்வி அமைச்சர் அன்பில் மகேஷ் அவர்களுடன் விரிவாக கலந்துரையாடியுள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஜீவன்



தொண்டமான் தெரிவித்தார். அத்தோடு மலையகத்தில் அமையவுள்ள பல்கலைகழகத்திற்கும், தமிழ்நாட்டின் அரசிற்கும் இடையே சுமூகமான உறவை வளர்த்துக் கொள்வது தொடர்பாகவும் ஆராயப்பட்டதாகவும், மலையகத்தின் கல்வி செயற்பாடுகளின் தற்போதைய நிலைமை தொடர்பாகவும் இருவருக்கும் இடையில் கலந்தாலோசிக்கப்பட்டதாகவும் அமைச்சர் ஜீவன்



குறிப்பிட்டார். அத்தோடு இலங்கையின் மலையக சமூகத்தின் கல்வி அபிவிருத்தி செயற்பாடுகளில் தமிழ் நாட்டு அரசின் ஒத்துழைப்பானது தொடர்ச்சியாக கிட்டும் பட்சத்தில் எமது மலையக சமூகத்தின் கல்வி முறை மேலும் வளர்ச்சியடையும் எனவும் கலந்துரையாடப்பட்டது.இந்த சந்திப்பின் மூலம் இந்திய அரசாங்கம் மற்றும் தமிழ் நாட்டின் அரசாங்கத்தின் பல்வேறு கல்வி அபிவிருத்திகள் இலங்கையில் மலையக மாணவர்களுக்கும் வந்தடையும் என நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தொல் திருமாளவன் ஊடான சந்திப்பு

இவருடான சந்திப்பு வெளிச்சம் ஊடக காரியாலயத்தில் இடம்பெற்றுள்ளது.மரியாதை நிமிர்த்தமாக இடம்பெற்ற சந்திப்புக்கு சென்ற ஜீவன் தொண்டமானுக்கு பொன்னாடை போர்த்தி தொல் திருமாவளவன்



மரியாதை அளித்துள்ளதுடன்,ஜீவன் தொண்டமானும் திருமாவளவனுக்கு பொன்னாடை அணிவித்து மரியாதை செலுத்தியுள்ளார். இதன் போது இருவருகளுக்கிடையில் நட்டை பகிரும் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. இதன் பின் ஜீவன் தொண்டமான் ஊடகத்திற்கு கருத்தும் தெரிவித்துள்ளார். இதில் இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் பிரதிநிதியாக இங்கு இதுவரை எவரும் வராத நிலையில் நான் சந்திக்க வந்தேன். வி.சி.கே கட்சியின் தலைவர் தொல் திருமாளவன் எனது தந்தை அமரர் ஆறுமுகம் தொண்டமானின் நல்ல நண்பர். இவருடன் இலங்கை நிலமை குறித்து பேசியதுடன்,புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள்,மற்றும் மலையக தமிழர்கள் தொடர்பாக பேசினோம். அத்துடன் கடந்த கால செயற்பாடுகள் குறித்தும் ஆராயப்பட்டு பேசப்பட்டது. இலங்கைக்கு வரவேண்டும் என அழைப்பு விடுத்தேன். இலங்கைக்கு வருவதாகவும் அவர் நட்பு ரீதியில் தெரிவித்தார்.

## வைகோவுடன் இடம்பெற்ற சந்திப்பு

சென்னை அண்ணா நகரில், மறுமலர்ச்சி தி.மு.கழகப் பொதுச்செயலாளர் வைகோ அவர்களைச் ஜீவன் தொண்டமான் கடந்த (30.08.2021) சந்தித்தார்.

இந்த சந்திப்பின்போது தனது தந்தையார் ஆறுமுகம் தொண்டமான் அவர்களுடைய மறைவுக்கு இரங்கல் தெரிவித்து அறிக்கை வெளியிட்டு இருந்தமைக்காக வைகோ அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார். அதன்போது தங்களைப் பற்றி, என் தந்தையார் நிறைய செய்திகளை எனக்குச் சொல்லி இருக்கின்றார் என்றும்,உங்கள் தாத்தா, பெரியவர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களுடன் எனக்கு நீண்ட காலப் பழக்கம் உண்டு. எண்பதுகளில் தொடங்கி, பலமுறை சந்தித்து இருக்கின்றேன் பல நிகழ்வுகளில் அவருடன் ஒன்றாகப் பங்கேற்று இருக்கின்றேன். தோட்டத் தொழிலாளர்களின் நலன் காக்கப் பணி ஆற்றினார். அவர்களின் குரலாக நாடாளுமன்றத்தில் முழங்கினார் என்றும் வை.கோவிந்தன் ஜீவன் தொண்டமானிடம் தெரிவித்துள்ளார். அதேபோல, உங்கள் தந்தையார் ஆறுமுகம் தொண்டமான் அவர்கள், சென்னைக்கு வரும்போதெல்லாம் என்னைச் சந்திப்பது வழக்கம். எதிர்பாராத வகையில், குறைந்த வயதில் அவர் திடீரென இயற்கை எய்தியது அதிர்ச்சியாக இருந்தது என்றும், 26 வயதிலேயே நீங்கள் அமைச்சர் பொறுப்பு ஏற்று இருக்கின்றீர்கள். என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றும் தெரிவித்துள்ளார். மேலும் இலங்கை வாழ் மலையக தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட வேண்டும்; உங்களுக்கு நிறையக் கடமைகள் இருக்கின்றன என்று, வைகோ குறிப்பிட்டுள்ளார்.ஆமாம் ஐயா, தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்காக, நுவரெலியாவில் ஒரு கல்லூரி அமைக்க வேண்டும். தமிழக அரசின் ஆதரவை எதிர்பார்க்கின்றோம். அதற்காக முதல்வரையும் சந்திக்க இருக்கின்றோம் என அமைச்சர் ஜீவன் தொண்டான் தெரிவித்துள்ளார். அத்துடன் நீங்கள் இலங்கைக்கு வருகை தந்து அங்கு தோட்டத் தொழிலாளர்களைச் சந்திக்க வேண்டும் என அழைப்பும் விடுத்துள்ளார். தமிழ்நாட்டில் உள்ள ஈழத்தமிழர்களின் நலன்களுக்காக, தமிழ்நாடு அரசு ரூ 300 கோடி ஒதுக்கி இருப்பதை வைகோ குறிப்பிட்டதை தொடர்ந்து, ஈழத்தமிழர் பிரச்சினை குறித்து, இருவரும் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டுள்ளனர்.

## மு.க.கனிமொழி ஊடான சந்திப்பு

இந்த சந்திப்பில் இலங்கை மலையக வாழ் இந்திய வம்சாவளி சமூகத்தின் தற்போதைய வாழ்வு நிலை குறித்து பேசியுள்ளார்.மேலும் முன்னால் அமைச்சரும் தனது தந்தையுமான அமரர் ஆறுமுகம் தொண்டமானின் அழைப்பின் பேரில் இலங்கை மலையக பகுதிக்கு வருகைதந்த மு.க.கணிமொழி மலையகத்தில் கண்டறிந்த விடயங்களை ஜீவன் தொண்டமானுடன் பகிர்ந்து கொண்டார்.மலையக மக்களின் வாழ்வாதாரம்,கல்வி அபிவிருத்தி,மற்றும் இம் மக்களின் வாழ்வியல் முன்னேற்றம் குறித்து கவனம் செலுத்தப்படுமெனவும் ஜீவனிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இளம் வயதில் மக்கள் சேவையை செய்ய துணிந்து களம் இறங்கியுள்ள உங்களுக்கு வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன் என கணிமொழி தெரிவித்துள்ளார்.மேலும் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் நிலை,மற்றும் புலம்பெயர்ந்து தமிழ் நாட்டில் முகாம்களில் வாழும் மக்களின் நலத்திட்டங்கள், இலங்கைக்கும் இந்தியாவுக்குமான உறவு, மலையக மக்களுக்கும் தமிழ்நாட்டுக்குமான உறவு தொடர்பிலும்,மலையக மக்களுக்கு தமிழ்நாட்டு அரசாங்கத்தினால் மற்றும் இன்றி முக்கிய தலைவர்கள் ஊடாக அபிவிருத்திகளுக்கென செய்யக்கூடிய உதவிகள் தொடர்பாகவும் பேசியுள்ளார்.

மேலும் சென்னையில் முக்கிய அரசியல்வாதிகளான கே.பி.பெரியகருப்பு மூத்த தலைவர் பலநொடுமாரன், நைமர் நாகேந்திரன் ஆகிய முககியஸ்தர்களையும் கடந்த ஆகஸ்ட் 29 திகதிகளில் இருந்து செப்டெம்பர் 04 வரை சென்னையில் சந்தித்து பேசியதுடன் அவர்களின் ஆசிகளையும் ஜீவன் தொண்டமான் பெற்றுக்கொண்டுள்ளார்.



நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com

SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 | 079 913 77 59

உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com

"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206

SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன் 0.62% தொடக்கம்
10% இல் சொந்த வீடு கட்ட அல்லது வாங்க
- இருக்கும் வீட்டை வைத்து இன்னொரு வீட்டை வாங்க...
- வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
- வீடு வாங்குவதற்கான ஆயுட்காப்புறுதி
- Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள், விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே » பயணக்காப்புறுதி
» ஆயுட்காப்புறுதி » சட்டக் காப்புறுதி

கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK

| | |
|---|---|
| துரித வேகம். | London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service |
| உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. | All Countries |
| பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. | 100% Insured |
| 365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. | 365 Days 24 Hours Service |
| உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். | Door to Door Delivery |
| இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. | Online Tracking System |
| சிறந்த பொதியாக்கம். | Quality Packing |

நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன் உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள் அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும் பெறுமதியான பரிசில்கள் மற்றும் அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு விசேட விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் பொதிகளையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651

Call us now!
0791023193
0787437071
MON-FRI 11.30 - 23.30
SATURDAY 11.30 - 23.00
SUNDAY 11.30 - 18.00
GRUNAU 1
ASIAN FOOD
RESTAURANT
STARTER | BIRIYANI SPL
BBQ | CURRY DISHES
GRILL-TANDOORI | FISH SPL
SPECIAL NAAN | DESERTS - ICE CREAM
MIX SABJI | COFFEE SPL
CALL WE DELIVER YOU - STAY HOME STAY SAFE
MEIERWISSENSTR 588064 ZURICH

# கொரோனாவால் இறந்த உடலங்களை இலவசமாக தகனக்கிரியை

## கோரோனா சேவையில் மாத்தளை மாநகரசபை முன்மாதிரி!

கொரோனாவால் மக்களின் வாழ்வாதாரம் வருமானம் பாதிக்கப்பட்டிருப்பதால் வசதி இல்லாமலுள்ளது. அதை உணர்ந்தே இதிலும் எமது நிவாரணத்தை வழங்கவேண்டும் என்ற மனிதாபிமான நோக்கொடு நாம் இவ் இலவச தகனக்கிரியை ஏற்பாட்டை செய்துவருகின்றோம்.

இவ்வாறு கூறுகிறார் மாத்தளை மாநகரசபையின் முதலாவது தமிழ்மேயர் சந்தனம் பிரகாஷ் அவர்கள்.

இலங்கையில் 341 உள்ளூராட்சிமன்றங்கள் உள்ளன. அவற்றில் 24மாநகரசபைகளும் ,41நகரசபைகளும் ,2%6 பிரதேசசபைகளும் இயங்குகின்றன.

இந்த 24 மாநகரசபைகளில் மூவினம்சார்ந்தவர்களும் முதல்வர்களாக அதாவது மேயர்களாகவுள்ளனர். ஆனால் இவர்களில் ஆக மூன்றே மூன்று மேயர்கள் தமிழர்களாகவுள்ளனர். கிழக்கில் மட்டு.மாநகரசபை மேயர் தியாகராஜா சரவணபவன் .வடக்கில் யாழ்.மாநகரசபை மேயர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன். மாத்தளை மாநகரசபையில் மேயர் சந்தனம் பிரகாஷ்.

ஆக வடக்கு கிழக்கிற்கு வெளியேயுள்ள ஒரேயொரு தமிழ் மேயர் சந்தனம் பிரகாஷ் மட்டுமே என்பது வெள்ளிடைமலை.

மாத்தளை மாநகரசபையில் 21 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களில் 3 தமிழ் உறுப்பினர்கள் , 5முஸ்லிம் உறுப்பினர்கள் ,13 சிங்கள உறுப்பினர்கள் இருக்கின்றனர். இந்தநிலையில் தமிழ் பிரமுகர் ஒருவர் முதல்வராக அதாவது மேயராக இருப்பதென்பது போற்றுதற்குரியது பெருமைக்குரியது.

அவரை அண்மையில் முதன்முதலாக கிழக்குமாகாணத்திற்கு விஜயம்செய்தபோது வரலாற்றுப்பிரசித்திபெற்ற உகந்தமலை முருகன் ஆலயத்திற்கும் விஜயம் செய்திருந்தார். அங்கு அவரிடம் பெற்ற நேர்காணலை இங்கு வாசகர்களுக்காக தருகிறோம்.

**?** **கேள்வி: தாங்கள் எந்த கட்சியைச் சார்ந்தவர்? தங்களது அரசியலுக்குள் ஈர்த்த அரசியல் ஆசான் யார்?**

பதில்: நான் கௌரவ ஆறுமுகம் தொண்டமான் அவர்களின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்தவன். எமது கட்சியின் அரசியல் தலைவர்கள் குறிப்பாக மத்தியமாகாணசபை உறுப்பினர் முத்துசாமி சிவஞானம் அவர்களே என்னை அரசியலுக்குள் வரவைத்தவர் ,ஈர்த்தவர். அவர்தான் எனது அரசியல்ஆசான்.என்னை அரசியலுக்குள் ஈர்த்தவர் அவர்தான்.



**?** **கேள்வி: மாத்தளை நகரசபையில் தங்களது அரசியல் பிரவேசம் எவ்வாறு அமைந்திருந்தது?**

பதில்: நான் 2002ஆம் ஆண்டு மாத்தளை மாநகரசபையில் ஓர் உறுப்பினராக அரசியலில் பிரவேசித்தேன். 2018இல் உதவி மேயராகவும் 26 ஆகஸ்ட் 2020இல் பதில் மேயராகவும், 2021 ஜனவரி 6ஆம் திகதி முதல் நிரந்தர மேயராகவும் சேவையாற்றி வருகிறேன்.

2002 இலிருந்து 4முறை உறுப்பினராகத்தெரிவானேன். இறுதியாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஐ.ம.சு.முன்னணி சார்பில் தெரிவானேன்.

2002தேர்தலில் ஐ.தே.கட்சி சார்பிலும் பின்னர் 2006 2011 2018 களில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பிலும் தெரிவானேன்.

**?** **கேள்வி: மாத்தளைமாநகரின் சமுககட்டமைப்பு பற்றிக்கூறுங்கள்?**

பதில்: மாத்தளையில் 50வீதம் பெரும்பான்மையின சிங்கள சமுகத்தினரும் ,மீதி 50வீதம் சரிக்குச்சமமாக தலா 25வீதம் தமிழ் மற்றும் முஸ்லிம் சமுகத்தினர் மிகவும் ஒற்றுமையாக வாழ்ந்துவருகின்றனர். முன்னுதாரண நகரமாக எமது மாத்தளை மாகரசபை திகழ்கிறது.

**?** **கேள்வி: மாநகரசபையில் எத்தனை உறுப்பினர்கள்?**

பதில், எமது சபையில் 21 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களில் 3 தமிழ் உறுப்பினர்கள் , 5முஸ்லிம் உறுப்பினர்கள் ,13 சிங்கள உறுப்பினர்கள் இருக்கின்றனர்.

**?** **கேள்வி: அப்படியெனின் வெறும் 3 தமிழ் உறுப்பினர்கள் உள்ள சபையில் மேயராக சாத்தியமானது எப்படி?**

பதில்: இது நல்ல கேள்வி. 2018ஏப்ரல் 20ஆம் திகதி இடம்பெற்ற தேர்தலில் மேயராக ஐ.தே.கட்சியைச்சேர்ந்த ஒரு பெரும்பான்மையினத்தவர்(அலுவிகாரை) தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.தெரிவாகி குறுகிய காலத்திலேயே ஊழல் குற்றச்சாட்டுகள் அவர்மீது முன்வைக்கப்பட்டன. மேலும் நிருவாகக்குழறுபடிகள் சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பிலும் மத்திய மாகாண ஆளுநருக்கு முறைப்பாடு செய்யப்பட்டது.

ஆளுநர் இதனை அரசின் கவனத்திற்கொண்டு வந்ததன் பிரகாரம் விசேட விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட்டு மேயரது ஊழல் குற்றச்சாட்டுக்கள் விசாரணைசெய்யப்பட்டது. முடிவாக அவரது ஊழல் குற்றசாட்டுகள் நிருபணமானது. அதன்காரணமாக அவர் மேயர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

விசாரணைக்காலம் 3மாதகாலமாக நீடித்தது. அந்தக்காலத்திலேயே நான் பதில் மேயராக கடமையாற்றினேன்.

அவரைவிலக்கியதன் பின்பு புதிய மேயரை தெரிவுசெய்வதற்காக கூட்டப்பட்ட விசேட அமர்வில் அனைத்து உறுப்பினர்களினதும் பேராதரவுடன் நான் 2021 ஜனவரி 6ஆம் திகதி மேயராகத் தெரிவானேன்.

மக்களுடைய தேவைகளை இனங்கண்டு சட்டரீதியாக எமது அதிகாரத்தின்படி சேவையாற்றிவருகிறேன்.

**?** **கேள்வி: அவரை விலக்கியதில் உங்களது பங்களிப்பு இருந்ததா?**

பதில்: நிச்சயமாக..2018இல் நடைபெற்றதேர்தலில் முதல்வரைத் தெரிவுசெய்வதில் எனது வகிபாகம் கூடுதலாகவிருந்துது. அலிக்அலிவிகாரையின் புதல்வாரன அலிவிகாரையை முதல்வராக்கினேன். நான் உப முதல்வரானேன்.

எனினும் அவர்மீது சுமத்தப்பட்ட ஊழல்குற்றச்சாட்டுகளையிட்டு நான் வாய்மூடி மௌனியாகவிருக்க முடியவில்லை. நான் தெரிவுசெய்த ஒருவர் இவ்வாறு குற்றமிழைக்கிறார் என்று பொங்கியெழுந்து அவருக்கெதிராக முதலாவது குரல் எழுப்பிய நபர் நானே. அதாவது நானே அவருக்கெதிரான முழுச்செயற்பாட்டிலும் ஈடுபட்டேன்.

மாத்தளையில் அதிகாரம் படைத்த பணபலம் படைத்த வரலாறு படைத்த பெரியகுடும்பத்தின் வாரிசு அவர். எனினும் முதல்வராக வந்தபின்னர் அவர் செய்த ஊழல்குற்றச்சாட்டுகளை அங்கீகரிக்க எனது மனச்சாட்சி இடம்கொடுக்கவில்லை. அவருக்கெதிராக செயற்பட்டபோது எமது சபையின் ஏனைய சிங்கள முஸ்லிம் தமிழ் உறுப்பினர்களின் பேராதரவு ஒத்துழைப்பு எனக்குக்கிடைத்தது. அவர்களுக்கு நம்பிக்கையுள்ள நபராக நான் மாறினேன்.

அதனால் அவர்களாகவே முன்வந்து எனது பெயரை முன்மொழிந்து வழிமொழிந்து முதல்வராக்கினார்கள்.

**?** **கேள்வி: செல்வாக்குள் அதுவும் பெரும்பான்மையினர் வாழுகின்ற பெரும்பான்மையின பிரமுகரை வீழ்த்துமளவிற்கு தங்கள் பின்புலம் எவ்வாறு அமைந்திருந்தது?**

பதில்: நான் சாதாரணகுடும்பத்தில் பிறந்தவன். மாத்தளை இந்து தேசியக்கல்லூரியில் உயர்தரம்வரை கல்விகற்றவன். கல்விகற்கும்போதே சமுகசேவையிலும் ஈடுபட்டவன். றத்தோட்டை இந்துக்கல்லூரியில் சில காலம் தொண்டராசிரியராக 199698பணியாற்றியவன்.

அகிலஇலங்கை ரீதியில் உதைபந்தாட்டதுறையில் தெரிவுசெயயப்பட்டு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரின் கையில் விருது பெற்றேன். உள்ளூராட்சிசபையில் உதவிநூலகராகவும் பணியாற்றினேன்.

உள்ளூராட்சி முறைமையில் டிப்ளோமாப்பட்டம் பெற்றவர் அதுமட்டுமல்ல் 4தடவைகள் மாநகரசபையிலிருந்து அனுபவம் பெற்றவர் சகலரதும் நன்மதிப்பைப் பெற்றவர் பொருத்தமானவர் என்ற அடிப்படையில் என்னை தெரிந்தார்கள்.



**?** **கேள்வி: மாத்தளை மாகரசபை வரலாற்றில் முதலாவது தமிழ் முதல்வர் என்ற பெருமையைப்பெற்றுள்ளீர்கள். அதன் வரலாற்றைச்சொல்லுங்கள்?**

பதில்: மாத்தளை மாநகரசபை வரலாற்றிலே எனக்குமுன்பு சிங்கள முஸ்லிம் அன்பர்களே மேயராக இருந்துள்ளனர். ஆக முதலாவது தமிழ் மேயர் என்ற பெருமையை கடவுள் எனக்களித்திருந்தார்.அதற்காக இறைவனுக்கும் எனது சக உறுப்பினர்களுக்கும் மக்களுக்கும் நன்றிகூறுகிறேன்.

மாத்தளை 1947இல் உள்ளூராட்சிமன்றமாக பரிணமித்தபோதிலும் 1970களில் மாநகரசபையாக தரமுயர்த்தப்பட்டது. இந்த 40வருடகாலத்துள் எந்தவொரு தமிழரும் முதல்வராக தெரிவுசெய்யப்பட்ட வரலாறு இல்லை.

1970க்கு முன்பு நகரசபையாகவிருந்தபோது இருபெரும் தமிழ்த்தலைவர்கள் தம்பிராசா ஐயா எதிர்மன்னசிங்கம் ஐயா ஆகியோர் தலைவர்களாக இருந்;துள்ளனர்.

**?** **கேள்வி: தங்களின் மக்களுக்கான சேவைகள் எவ்வாறு அமைந்துள்ளன?**

பதில்: எனது காலத்தில் மூவினத்திற்கும் சமமாகவே சேவையாற்றிவருகிறேன் . துரதிஸ்வசமாக கொரோனா தாக்கம் வந்தமையினால் பாரிய அபிவிருத்தி என்று செய்யமுடியாத நிலையிருக்கிறது. எனினும் வீதிஅபிவிருத்தி தொடக்கம் தேவையான கட்டுமானப்பணிகள் இடம்பெற்றுவருகின்றன.



**?** **கேள்வி: இலங்கையில் மாநகரசபையொன்று கொரோனாச் சேவைகளை சிறப்பாக மாத்தளை மாநகரசபை முன்னெடுத்துவருவதாக அறியக்கிடைத்தது. அதுபற்றிக்கூறுங்கள்?**

பதில்: எமது சபையால் கொரோனாவுக்கென பல வேலைத்திட்டங்களை செய்துவருகிறோம். கூடுதலான நிதியை கொரோனாச்சேவைக்கு ஒதுக்கி பயன்படுத்திவருகிறோம்.உறுப்பினர்களும் ஏகோபித்தமுறையில் தமது பூரண ஆதரவை நல்கிவருவதும் இவ்வெற்றிக்கு காரணமாகும்.

மக்களைப்பாதுகாக்கின்ற சேவையை நாம் எமது சுகாதாரப்பிரிவினரைக்கொண்டு முதன்மைச்செயற்பாடாக இரவுபகலாகச் செய்துவருகின்றோம்.

**?** **கேள்வி: முதலாவதாக அம்புலன்ஸ் சேவையின் முக்கியத்துவம் பற்றிக்கூறுங்கள்?**

பதில்: மாத்தளை மாநகர எல்லைக்குள் கொவிட் 19 தொற்றுக்குள்ளான தொற்றாளர்களை அவசர நிலைமைகளின் போது சிகிச்சை நிலையங்களுக்கு அழைத்து செல்வதற்கு வாகன வசதியின்மையால் அசௌகரியத்துக்கு உள்ளாகிவந்தனர்.

இதற்கு தீர்வுகாணுமுகமாக எமது சபையினால் இவ்விலவச வாகனசேவையை ஏற்படுத்தியுள்ளோம். இதற்கென ஆளணியினரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்காக உதவி கரம் நீட்டுவதற்காக 24 மணித்தியால இலவச வாகன சேவையை வழங்குவதற்கு கடந்த 24ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அவசர தேவைக்கு (Hotline) 0710227227 க்கு தொடர்பு கொள்ளலாம். இச்சேவையையிட்டு மக்கள் மிகுந்த பாராட்டைத் தெரிவித்துவருகின்றனர்.

தற்காலத்தில் கொவிட் தொற்றுக்குள்ளாகினால் உறவுகள் ஏனையோர் ஒதுக்கிவருவதைக்காணக்கூடியதாயிருந்தது. அவரவர் பாதுகாப்பே அதற்கு காரணம். தொற்றின் வேகம் நோயின் அகோரம் என்பனவே அதற்கு காணரங்கள்.

நோய்வாய்ப்பட்டவர்களை ஆஸ்பத்திரிக்குகொண்டுபோக வாகன உரிமையாளர்கள் தவிர்த்துவந்தார்கள். ஆதலால்தான் தனியான சேவையை செய்ய முன்வந்தோம். கைகொடுத்து உதவவேண்டும்.

**?** **கேள்வி: இது சுகாதாரத்துறையின் கடமையல்லவா? எவ்வாறு அது சாத்தியமானது?**

பதில்: ஆம். எமது சபையிலும் சுகாதாரப்பரிவு உள்ளது. அவர்களின் துணையோடுதான் இம்மக்கள்சேவையை செய்துவருகின்றோம்.பொசிட்டிவ் கருத்ப்பட்டவர்களை எமது அம்புலன்சிஸ் பிஎச்ஐ சகிதம் ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்வது மட்டுமல்ல அவரோடிருந்த ஏனைய குடும்ப உறுப்பினர்களுகளை தனிமைப்படுத்தி அவர்களுக்குத் தேவையான மருந்துகளை எமது சபையிலுள்ள மற்றொரு குழுவினர் வழங்குவார்கள்.



**?** **கேள்வி: கொவிட் நபர் சார்ந்த குடும்பங்களுக்கான சேவைகள் என்னென்ன மேற்கொள்ளப்படுகின்றன?**

பதில்: அவர்களுக்கு அரசாங்கம் வழங்கும் உலருணவுப்பொதிகளுக்கு மேலதிகமாக சபைமூலமும் வழங்கிவருகின்றோம். எமது சபைமூலமாக தொகுதி தொகுதியாக பிரித்து அவர்கள்மூலம் இப்பொருட்களை வழங்கிவருகிறோம்.

14நாட்காலத்தில் எம்மைவிட்டால் வேறு யாருமில்லை என்ற மனப்பாங்கில் நாம் அர்ப்பணிப்பான மக்கள்சேவையை முன்னெடுத்துவருகின்றோம். சிலவேளை யாரும் இருக்கலாம் ஆனால் அவர்கள் இன்றைய தொற்றுக்காலத்தில் உதவிசெய்ய முன்வரமாட்டார்கள். எனவேதான மக்கள்சேவைக்கென வந்த நாங்கள் அப்பணியை இந்த இக்கட்டான காலகட்டத்தில் வழங்கிவருகின்றோம்.

**?** **கேள்வி: ஏனைய இடங்களில் சுகாதாரத்திணைக்களம் முன்னெடுத்திருக்கின்ற வக்சீன் அதாவது தடுப்பூசி வழங்கும் திட்டத்தை நீங்கள் முன்னெடுத்திருப்பதாக அறிகிறோம். அது எவ்வாறு சாத்தியமாயிற்று?**

பதில்: மாநகரசபைக்குட்பட்ட பிரதேசத்தில் தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டத்தையும் பலரும் மெச்சத்தக்கவகையில் சிறப்பாக முன்னெடுத்துவருகி;றோம். அதற்கு எமது வைத்தியஅதிகாரி டாக்டர் அனுசா வெலகெதர உள்ளிட்ட சுகாதாரக்குழுவினர் பரிபூரணமாக ஒத்துழைத்து வருகின்றனர்.மாநகரசபையில் 45ஆயிரமளவில் வாக்காளர்கள். மக்கள்சனத்தொகை 90ஆயிரம்பேரளவில் வாழ்ந்துவருகின்றனர்.

**?** **கேள்வி: கொரோனாவால் மரணித்தவர்களின் உடலங்களை தாங்களே பொறுப்பெடுத்து தகனக்கிரியைகளை இலவசமாகச்செய்வதாக கூறப்படுகின்றதே? அதனை விபரியுங்கள்?**

பதில்:சபையில் ஒரு பிரேரணையைக்கொண்டுவந்து கொரோனாவால் இறக்கின்றவர்களின் உடலங்களை நாமே பொறுப்பெடுத்து இலவசமாக தகனக்கிரியை செய்துவருகின்றோம். இதுவரை சுமார் 150பேர் அளவில் உடல்ங்கள் தகனக்கிரியையை செய்துள்ளோம். ஒருவர் கொரோனாவால் மரணித்தால் அவருக்கு சுமார் 10ஆயிரம் ருபா முதல் 15ஆயிரம் ருபா எமது சபைக்கு வரைசெலவாகின்றது.இருந்தும் மக்களுக்கான உயரிய அந்திமகால சேவையாக இதனைக்கருதுகிறோம்.

கொரோனாவால் மக்களின் வாழ்வாதாரம் வருமானம் பாதிக்கப்பட்டிருப்பதால் வசதி இல்லாமலுள்ளது. அதையுணர்ந்தே இதிலும் எமது நிவாரணத்தை வழங்கவேண்டும் என்ற மனிதாபிமான நோக்கொடு நாம் இவ் இலவச தகனக்கிரியை ஏற்பாட்டை செய்துவருகின்றோம்.

**?** **கேள்வி: மாநகரசபைக்குட்பட்ட மக்களுக்கு மட்டுமா இந்த இலவச சேவை?**

பதில்: நல்ல கேள்வி. உண்மையில் இது எமது மாநகரசபை எல்லைக்குட்பட்டவர்களுக்கு மாத்திரமே என்று ஆரம்பிக்கப்பட்டது. எனினும் எமது எல்லைக்குள் உள்ள மாத்தளை ஆதாரவைத்தியசாலையில் கொரோனாவால் மரணிக்கும் அனைவரது உடலங்களையும் அவர் எந்த ஊராக எந்த பிரதேசத்தவராக இருந்தாலும் எந்த இனத்தவராக நாமே முன்னின்று பொறுப்பேற்று அதனை முறைப்படி தகனம்செய்துவருகின்றோம்.

எமது சபையின் அதிகாரவரம்பிற்குட்பட்டவகையில் எமது மநாகரஎல்லைக்குட்பட்ட மக்களுக்கு சேவை செய்வதே எமது பிரதான இலக்கு. இருந்தபோதிலும் கொரோனாவால் மாத்தளை ஆதாரவைத்தியசாலையில் இறக்கும் மக்களது உடலங்களை சட்டத்திற்குஅப்பால் ஆனால் அதற்குரிய ஆளுநரின் உத்தியோகபூர்வமாக விசேட அனுமதியுடன் செயற்படுத்திவருகின்றோம்.

**?** **கேள்வி: தற்போது நீங்கள் எந்தக்கட்சி? அடுத்த தேர்தலில் போட்டியிடுவீர்களா?**

பதில்: நான் எந்தக்கட்சி சார்ந்தவனுமல்ல. அனைத்து கட்சிக்காரர்களும் இணைந்தே என்னை மேயராக்கியுள்ளனர். எனவே அனைவருக்கும் சேவைசெய்ய கடமைப்பட்டுள்ளேன். அதனையே செய்துவருகின்றேன்.

எமது ஆட்சிக்காலம் அடுத்தவருடம் மார்ச்சில் சட்டரீதியாக நிறைவடைகின்றது. அடுத்ததேர்தலில் போட்டியிடுவதா இல்லையா எந்தக்கட்சியில் போட்டியிடுவது என்பதெல்லாம் நேரம்வரும்போது தெரியவரும்.

பதவியோ தேர்தலோ அதற்கு முதல் மக்கள் உயிரோடு இருக்கவேண்டும் மக்களைக்காபப்டற்றவேண்டும் அதுவே எமது தலையாய நோக்கம்.

**?** **கேள்வி: கிழக்கிற்கு முதல்தடவை வந்துள்ளீர்கள். அதுவும் காட்டுக்குள் உள்ள உகந்தமலை முருகளைத்தரிசிக்கவந்த காரணம் என்ன?**

பதில்: இது எனது நீண்டநாள் ஆசை. இவ்வாலயத்தைப்பற்றி ஊடகங்கள் வாயிலாக உங்கள் எழுத்துக்களில் பலதடவைகள் வாசித்திருக்கிறேன். வரலாற்றுப்பரசித்திபெற்ற உகந்தைமலை முருகனாயலத்திற்கு வரவேண்டும்.அருளாசிபெறவேண்டும் என்ற ஆசை இருந்தது. கல்முனை மாநகரசபை உறுப்பினர் நண்பர் சந்திரசேகரம் ராஜனின் அன்பான அழைப்பும் இங்கு வரக்காரணம். அது இந்த இக்கட்டான காலகட்டத்தில் கிடைத்தமையை ஒரு பாக்கியமாககருதுகின்றேன். கிழக்கின் அன்பான உபசரிப்புக்கு வாழ்த்துக்கள்.



வி.ரி.சகாதேவராஜா
காரைதீவு நிருபர்

# திருமலை மாவட்டத்தில் கடந்த 24 மணித்தியாலத்தில் 8 பேர் கோரோனா தோற்றினால் பலி

**(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)**

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த 24 மணித்தியாலத்தில் 8 பேர் கொரோனா தொற்றினால் மரணித்துள்ள நிலையில் 137பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகம் தெரிவித்துள்ளது.

திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகத்தினால் நேற்று (10) வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த 24 மணித்தியாலத்தில் %2 ஆண்களும், 65 பெண்களும் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், செப்டம்பர் முதலாம் திகதி தொடக்கம் 9ஆம் திகதி வரைக்கும் திருகோணமலை மாவட்டத்தில் 1253 பேர் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகம் வெளியிட்டுள்ள நாளாந்தம் புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த 9 நாட்களுக்குள் 51 பேர் மரணித்துள்ளதாகவும் இதுவரை மாவட்டத்தில் 1106% பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் 299 பேர் இதுவரை மரணித்துள்ளதாகவும் 159 கற்பிணி தாய்மார்களும் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகம் தெரிவித்துள்ளது.

# திருக்கோவிலில் அரசின் கட்டுப்பாட்டு விலை கண்காணிப்பாளர்கள் நியமனம்



**(திருக்கோவில் நிருபர்)**

இலங்கை அரசினால் தற்போது நடைமுறைப்படுத்தியுள்ள கட்டுப்பாட்டு விலைகளில் மக்களுக்கு வியாபாரிகள் பொருட்களை விற்பனை செய்கின்றார்களா என்பதனை கண்காணிக்கும் நோக்கில் திருக்கோவில் பிரதேசத்தில் ஐந்து (5) கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வு திருக்கோவில் பிரதேச செயலயத்தில் பிரதேச செயலாளர் ரீ கஜேந்திரனினால் நேற்று இடம்பெற்று இருந்தன.இவ் நியமனங்கள் பாவனையாளர்கள் அதிகார சபையின் ஊடாக வழங்கி வைக்கப்பட்டுள்ளன

இவ் கண்காணிப்பாளர்கள் திருக்கோவில் பிரதேச செயலாளரின் நிருவாக எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்களில் அரசின் சுற்று நிருபத்திற்கு அமைவாக கட்டுப்பாட்டு விலையில் பொருட்கள் விற்பனை முன்னெடுக்கப்படுகின்றனவான என கண்காணித்து பாவனையாளர் மற்றும் நுகர்வோர் அதிகார சபையின் மாவட்ட உத்தியோகத்தருக்கு அறிக்கை இடுதல் இவர்களின் பணியாகும்.

இவ்வாறு இவ் கண்காணிப்பாளர்களினால் அறிக்கை இடும் வர்த்தகர்களுக்கு மாவட்ட நுகர்வோர் அதிகார சபையின் விசாரணை உத்தியோகத்தர் மேற்பார்வையின் ஊடாக சட்டநடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் உதவிப் பிரதேச செயலாளர் கே.சதிசேகரன் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.அனோஜா அம்பாரை மாவட்ட உதவி விசாரணை உத்தியோகத்தர் ரீ.சுதர்ஷன் என பலரும் கலந்து கொண்டு இருந்தனர்.

# பட்டதாரி பயிலுனர்கள் ஆறு பேர் நியமனம்!



**(சர்ஜுன் லாபீர்)**

அத்தியவசிய சேவைகளுக்கான கல்முனை பிரதேச செயலக ஒருங்கிணைப்பாளருக்கான அத்தியாவசிய சேவை திட்டத்தின் கீழ் மேம்பாட்டு உதவியாளர்களாக பட்டதாரி பயிலுனர்கள் ஆறு பேர் நியமனம்.

நேற்று கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலியின் வேண்டுகோளுக்கிணங்க பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் எம் ஜௌபர் தலைமையில் இவ் நியமனம் வழங்கப்பட்டது.

இதில் பிரதேச செயலக பிரதம முகாமைத்துவ சேவை அதிகாரி எம்.எம் ஹசன்,அபிவிருத்தி உத்தியோகத்தர் எம் சியாம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அம்பாறை ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலய வருடாந்த தீர்த்தோற்சவம்

## சுகாதார நடைமுறைகளுடன் மக்கள் பங்கேற்பின்றி நடைபெற்றது

**(வி.சுகிர்தகுமார் )**



கிழக்கு மாகாணம்; அம்பாரை மாவட்டத்தில் அம்பாரையின் மத்திய பகுதியில் அமைந்துள்ள அம்பாரை ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலய வருடாந்த தீர்த்தோற்சவம் நேற்று சுகாதார நடைமுறைகளுடன் மக்கள் பங்கேற்பின்றி நடைபெற்றது.

இந்து பௌத்த மக்களின் ஒற்றுமைக்கும் இரு சமயத்தவராலும் போற்றி வழிபடப்படும் இவ்வாலயத்தின் தீர்த்தோற்சவம்; ஆலய தலைவர் வ.கருணைநாதன் தலைமையில் இடம்பெற்றதுடன் ஒரு சில இந்து பௌத்த அடியவர்கள் கலந்து கொண்டனர்.

ஆலயத்தில் நடைபெற்ற பூஜையை தொடர்ந்து அடியார்களினால் விக்னேஸ்வரப்பெருமான் உள்வீதி வலமாக தூக்கிச் செல்லப்பட்டார்.

பின்னர் ஆலயத்தின் புனித தீர்த்தக் குளத்தை சென்றடைந்தது. குளத்தருகே அமர்த்தப்பட்ட விக்னேஸ்வரப்பெருமானுக்கு அபிசேகப்பூஜை நடைபெற்றது.

அரோகரா எனும் வேண்டுதலுடன் குளத்தில் இடம்பெற்ற தீர்த்தோற்சவத்தில் எம்பெருமானும்;; சில பக்தர்களும் கலந்து கொண்டு தீர்த்தம் ஆடினர்.

வழிபாட்டுக் கிரியைகளை ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ க.கு.நகுலேஸ்வரக்குருக்கள் தலைமையிலான குருமார்கள் நடாத்தி வைத்தனர்.

# காட்டுக்கு விறகு வெட்டுவதற்காக சென்று காணாமல் போன 26 வயதுடைய யுவதி மீட்பு



**(க.கிஷாந்தன்)**

தாயுடன் கடந்த 5 நாட்களுக்கு முன் நுவரெலியா டன்சினன் பகுதியில் காட்டுக்கு விறகு வெட்டுவதற்காக சென்ற 26 வயதுடைய யுவதி மீட்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த யுவதி நுவரெலியா கிகிலியாமான காட்டிலிருந்து மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவ்வாறு மீட்கப்பட்டவர் நுவரெலியாவத்த கீழ் பிரிவில் வசித்த ஜெயபாலன் கற்புகதாரணி என்ற 26 வயது யுவதியாவார்.

நுவரெலியா இராணுவ முகாம் அதிகாரிகள், நுவரெலியா பொலிஸார் மற்றும் டன்சினன் தோட்டத் மக்கள் கடந்த 5 நாட்களாக இவரை தேடும் பணியில் ஈடுபட்டிருந்தனர். இதன் போது சாந்திபுர பிரதேச மக்கள் கிகிலியாமான காட்டுப் பகுதியில் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது குறித்த யுவதி காட்டில் கூக்குரல் எழுப்பியுள்ளார் அதன் போது இவர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார். 5 நாட்கள் காட்டில் தனியாக பசியுடன் அலைந்த யுவதிக்கு பிரதேச மக்கள் உணவுகளை வழங்கிய பின் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

காணாமல் போயிருந்த யுவதி தெரிவிக்கையில், தாயுடன் டன்சினன் தோட்டத்தில் இருந்து விறகு வெட்ட சென்ற நிலையில் தாயிடமிருந்து வழி தவறி பல பாதைகளில் அங்கும் இங்கும் அலைந்து வீடு திரும்ப முடியாமல் தவித்ததாகவும், இரவு வேளைகளில் அச்சம் காரணமாக எங்கும் நகராமல் ஒரே இடத்தில் இருந்ததாக தெரிவித்துள்ளார்.

# கோரோனா அச்சுறுத்தலினால் வருமானத்தை இழந்தவர்களுக்கு இராணுவம் நிவாரண உதவி





**(பாறுக் ஷிஹான்)**

கொரோனா அச்சுறுத்தலினால் வருமானத்தை இழந்த குடும்பங்களுக்கு உலருணவு வழங்கும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக இராணுவத்தின் பல்வேறு பிரிவுகளால் கிழக்கு மாகாணம் எங்கும் மேற்கொண்டு கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் படி அம்பாறை மாவட்டம் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பெரியநீலாவணை பகுதியில் உள்ள வறிய மக்களுக்கு உலருணவு பொருட்கள் அடங்கிய பொதிகள் கல்முனைப் பிராந்திய இராணுவ மேஜர் சாந்த விஜேயகோனின் ஏற்பாட்டில் வழங்கி வைக்கப்பட்டு வருகின்றன.

இதன் போது நேற்று இடம்பெற்ற இந்நிவாரண செயற்பாட்டில் இராணுவ அதிகாரிகள் உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினர் அப்பகுதியில் சுகயீனமுற்றுள்ள குடும்ப தலைவர்கள் கணவனை இழந்த பெண்தலைமைத்துவ குடும்பங்களை இனங்கண்டு பொருட்களை வீடு வீடாக சென்று வழங்கி வைத்தனர்.

குறித்த உலருணவு பொருட்களில் அரிசி சீனி தேயிலை பால் மா உள்ளிட்ட பொருட்கள் உள்ளடங்குவதுடன் பல குடும்பங்களுக்கு இப்பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திருமலையில் உள்ளூர் துப்பாக்கியுடன் இருவர் கைது

**(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)**

திருகோணமலை நாமல் வத்த காட்டுப்பகுதியில் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட துப்பாக்கியை மறைத்து வைத்துக்கொண்டு வேட்டையாடிய குற்றச்சாட்டின் பேரில் இரண்டு நபர்களை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிசாருக்கு வழங்கிய இரகசிய தகவலையடுத்து குறித்த நபர்களை கைது செய்து விசாரணை செய்தபோது அவர்களிடமிருந்து உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டதாகவும் வேட்டையாடிய மானின் தோல் மற்றும் எலும்புகள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர்கள் இருவரையும் திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மொரவெவ பொலிசார் தெரிவித்தனர்.

# உலருணவுப் பொருட்கள் வழங்கல்



மட்டக்களப்பு வாழைச்சேனை பாரதி கலை இலக்கிய சமூகமேம்பாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் சிவசராந்தன் மங்களேஸ்வரி (புதுக்குடியிருப்பு வாழைச்சேனை) அவர்களின் அனுசரணையில் கொண்டையங்கேணி கிராமத்து 13 குடும்பங்களுக்கான 2000ரூபா பெறுமதியான உலர் உணவுப்பொருட் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன.கழகத்தின் உறுப்பினர் ஆசிரியர் சா.முகிலன் அவர்கள் பொருட்களை வினியோகித்து வைத்தார்.

# செழுமைமிக்க 100 நகரங்களை அழகுபடுத்தும் செயற்திட்டம் கல்முனையில் ஆரம்பம்



**(பாறுக் ஷிஹான், சகா)**

நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு எனும் அரசாங்கத்தின் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் 100 பெருநகரங்களை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் அடிப்படையில் நாட்டில் உள்ள 100 நகரங்களினை தெரிவு செய்து அபிவிருத்தி செய்து வருகின்றது.

அந்த அடிப்படையில் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம் ஹரிஸ் அவர்களின் முயற்சியினால் கடலோர பாதுகாப்பு கழிவுப் பொருட்கள் அகற்றுகை, மற்றும் சமுதாய தூய்மை இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நகர அபிவிருத்தி அதிகார சபையின் நெறிப்படுத்தலில் சுமார் 18.7 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் கல்முனை நகரம் அழகுபடுத்தப்பட இருக்கின்றது.

இத் திட்டத்தின் பெயர் பலகையினை திரை நீக்கம் செய்யும் ஆரம்ப நிகழ்வு நேற்று(10) கல்முனை மாநகர சபை முதல்வர் சிரேஸ்ட சட்டத்தரணி ஏ.எம் ரக்கீப் தலைமையில் கல்முனை பஸ் தரிப்பிடத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் எஸ்.பி.எஸ் ஜெயதிஸ்ஸ,கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான சட்டத்தரணி ஏ.எம் ரோஸன் அக்தார்,எம்.எஸ்.எம் நிஸார்,ஏ.சி.ஏ சத்தார்,சந்திரசேகரம் ராஜன்,சிவலிங்கம், எம் எம்.எம் நவாஸ்,செலஸ்தனா,நந்தினி புவனேஸ்வரி, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள்,பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் அவர்களின் பிரத்தியேக செயலாளர் நௌபர் ஏ பாவா,இணைப்பு செயலாளர் சப்ராஸ் நிலாம்,உட்பட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.




# பிரதமரின் பாராளுமன்ற நடவடிக்கைகளுக்கான செயலாளர் பதவிக்கு உதித் லொக்குபண்டார நியமனம்

(வாஸ் கூஞ்ஞ)

பிரதமரின் பாராளுமன்ற நடவடிக்கைகளுக்கான செயலாளராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதித் லொக்குபண்டார அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக அவரின் ஊடகப் பிரிவு தெரிவிக்கின்றது.

அதற்கான நியமனக் கடிதத்தை உதித் லொக்குபண்டார,பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் கரங்களினால் வியாழக்கிழமை (09) அலரி மாளிகையில் வைத்து பெற்றுக் கொண்டார்.

உதித் சஞ்சய லொக்குபண்டார அனுபவம் வாய்ந்த அரசியல்வாதியான விஜமு லொக்குபண்டார அவர்களின் சிரேஷ்ட புதல்வராவார். பதுளை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி 2009ஆம் ஆண்டு பாராளுமன்றத்திற்கு தெரிவான உதித் லொக்குபண்டார 2015ஆம் ஆண்டு வரை பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தினார்.

அமைச்சுக்களின் ஆலோசனை குழுக்கள் பலவற்றில் பிரதிநிதியாக செயற்பட்ட உதித் லொக்குபண்டார அவர்கள் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கண்காணிப்பு உறுப்பினராகவும் சிறிது காலம் பணியாற்றினார்.

2015ஆம் ஆண்டு தேர்தலின் பின்னர் 5ஆவது நிறைவேற்று ஜனாதிபதியான கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் பிரத்தியேக செயலாளராக சேவையாற்றிய அவர் லைசியம் சர்வதேச பாடசாலையின் பழைய மாணவராவார்.

லண்டன் பல்கலைக்கழகத்தில் பொருளியல் துறையில் கல்வி பயின்ற உதித் லொக்குபண்டார, லண்டன் வர்த்தக சபையில் (சேம்பர் ஒஃப் கொமர்ஸ்) சந்தைப்படுத்தல் டிப்ளோமா மற்றும் பட்டய சந்தைப்படுத்தல் முகாமைத்துவ நிபுணராகவும் செயற்பட்டுள்ளார்.

# மன்னாரில் வியாழக்கிழமை 11 கொரோனா தொற்றாளர்கள்

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் வியாழக்கிழமை கிடைக்கப்பெற்ற தகவலில் 11 நபர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் தெரிவித்துள்ளார்.

இப்பகுதியில் எடுக்கப்பட்ட பி.சீ.ஆர். மற்றும் அன்ரிஜன் பரிசோதனைகளிலேயே இவ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

எடுக்கப்பட்ட பி.சீ.ஆர். பரிசோதனையில் மன்னார் பொது வைத்தியசாலையில் 03 பேருக்கும் கடற்படையினர் ஒருவருக்கும், மன்னார் பொது வைத்தியசாலையில் 02 பேரும், சிலாவத்துறை மாவட்ட வைத்திசாலையில் ஒருவரும், மாந்தை மேற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 03 பேருக்கும் மற்றும் மடுவில் ஒருவருக்கும் மேற்கொள்ள்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஆகவே இதைத் தொடர்ந்து மன்னார் மாவட்டத்தில் இதுவரைக்கும் கொரோனா தொற்றாளர்களின் தொகை 1860 ஆக உயர்ந்துள்ளது.

இவ் நடப்பு மாதத்தில் அதாவது செப்ரம்பர் மாதத்தில் 176 கொவிட் தொற்றாளர்கள் உறுதி செய்யப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அறிக்கை மேலும் தெரிவிக்கின்றது.

அத்துடன் இவ் மாவட்டத்தில் இதுவரை 22 மரணங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக 28616 பி.சீ.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் வியாழக்கிழமை (09) அன்று 445 பேருக்கு பி.சீ.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இவ் மாதம் (பெப்பரவரி) 856 நபர்களுக்கு பி.சீ.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவரின் அறிக்கை மேலும் தெரிவிக்கின்றது.இவ் பகுதியில் முதலாவது கொவிட் தடுப்பூசி 68375 பேருக்கும், இரண்டாவது தடுப்பூசி 55906 நபர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொரோனா நீங்க இ.கி.மிசனில் விநாயகர் சதுர்த்தி விசேட பூஜை வழிபாடு

(வி.ரி.சகாதேவராஜா)



வேழமுகத்து விநாயகன் பிறந்த நாளான நேற்று(10) விநாயகசதுர்த்தி நாளாகும். ஆவணி மாதத்தில் வளர்பிறையில் வருகின்ற சதுர்த்தி தினத்தில் விநாயகப்பெருமான பிறந்தார்.

அதனையொட்டி இராமகிருஸ்மிசன் மட்டக்களப்பு கல்லடி ஆச்சிரமத்தில் விசேட பூஜையும் வழிபாடும் இடம்பெற்றது. விநாயகப்பெருமான் அறுகம்புல்லினால் அலங்கரிக்கப்பட்டு 21 நிவேதனங்கள் படைக்கப்பட்டன.

நாடு கொரோனாத் தொற்றிலிருந்து விடுபட வேண்டி அங்கு விசேட யாகமும் சிறப்புப்பூஜையும் இடம்பெற்றது.

இராமகிருஸ்மிசன் மட்டக்களப்பு கல்லடி ஆச்சிரம உதவிமேலாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மஹராஜ் இச்சிறப்பு பூஜையை நடாத்தினார்.

சுகாதாரமுறைப்படி இல்லச்சிறுவர்கள் வழிபாட்டில் பங்கேற்றனர்.



# கொரோனாத் தொற்றுக்குள்ளான பயனாளிகளுக்கு நிவாரண உதவிகளை வழங்கியது பசுமையில்லம்

(அ .அச்சுதன்)

மூதூர் கிழக்கு , பாட்டாளிபுரம் கிராமசேவையாளர் பிரிவின் வீரமாநகர்க் கிராமத்தில் சுமார் எழுபது குடும்பங்களை இணைத்து அவர்களை தமது சுய உற்பத்தியில் வாழும் புறச்சூழலை உருவாக்கியுள்ள பசுமையில்லம் நேற்று(09) கொரோனாத் தொற்றுக்குள்ளான தமது பதினைந்து பயனாளிகளுக்கு நிவாரண உதவிகளை வழங்கியிருந்தது.

பசுமையில்லத்தின் பிரதேச இணைப்பாளரினால் விடுக்கப்பட்ட உதவிக் கோரிக்கைக்கு அமைய அமரர் இளையவன் சிற்றம்பலம் அவர்களது பத்தாமாண்டு நினைவு தினத்தையொட்டி சுவிற்ஸலாந்தின் சூரிச் நகரில் வதியும் வதனி சுரேஸ் தம்பதியினரின் நிதியுதவியில் இவ் நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன.

பசுமையில்லத்தின் வட கிழக்கு மாகாணங்களுக்கான பணிப்பாளர் திரு. விநோத் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டவர்களின் வீடுகளுக்கே சென்று இடருதவிப் பொருட்களை கையளித்திருந்தார்.

# தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரிக்கு குடிநீர் தொகுதி கையளிப்பு




(இஃஜாஸ் ஏ பரீட்)

உலகளாவிய ரீதியில் ஏற்பட்டிருக்கும் கொவிட் -19 நோயினை கருத்திற்கொண்டு தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவர்களின் சுகாதார நலன் கருதி பல பேர் பயன்படுத்தக்கூடியவாரான நீர்த் தொகுதி அமைக்கப்பட்டு கடந்த புதன்கிழமை கையளிக்கப்பட்டுள்ளது.இக் கல்லூரியில் பல மாணவர்களின் சுகாதார நலன் கருதி ஒரே நேரத்தில் பயன்படுத்தக்கூடியவரான நீர் தேவை உள்ளது எனவும்,

ஆகவே தண்ணீர் தாங்கி வைத்து நீர் வசதியினை ஏற்படுத்தித் தருமாறு திருகோணமலை நகர சபை உறுப்பினர் எஸ். யுவராஜ்குமார் கோரிக்கை ஒன்றை முன் வைத்திருந்தார்.

அவரது கோரிக்கைக்கிணங்க நேரில் சென்று பார்வையிட்டதுடன் அல் ஹிக்மதுல் உம்மா அமைப்பின் அனுசரணையுடன் குடிநீர் தொகுதி அமைக்கப்பட்டு சுகாதார வழிமுறையினை பின்பற்றி உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் திருகோணமலை நகர சபை உறுப்பினர் எஸ்.யுவராஜ்குமார், தி / உவர்மலை விவேகானந்தா கல்லூரி (தேசிய பாடசாலை) அதிபர், மற்றும் ஆசிரியர்கள், அல் ஹிக்மதுல் உம்மா அமைப்பின் இணைப்பாளர், மாணவர்கள் என பலர் கலந்து சிறப்பித்தனர்.

# மீண்டும் கிராமங்களில் தலை தூக்கியுள்ள கசிப்பு உற்பத்தியினை கட்டுப்படுத்துமாறு பொது அமைப்புக்கள் கோரிக்கை

(இ.சுதாகரன்)

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக பல மனித உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ள சூழ் நிலையில் கொரோனா வைரஸ் தாக்கத்தினை கட்டுப்படுத்தும் நோக்கில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற பயணக்கட்டுப்பாடு காரணமாக மதுபான சாலைகள் பூட்டப்பட்டிருக்கும் நிலையில் சட்ட விரோதமான உள்ளூர் கசிப்பு உற்பத்தி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.இதனைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் துரித நடவடிக்கையினை முன்னெடுக்க வேண்டுமென பொது அமைப்புக்கள் கோரிக்கையினை முன்வைக்கின்றனர்.

கடந்த பல வருட காலமாக கிராமங்களில் பெரிதளவில் பேசப்பட்டு வந்த உள்ளூர் கசிப்பு உற்பத்தியானது 2000 ஆண்டின் பிற்பகுதியில் விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸார், மதுவரித்திணைக்களம்,சமூக சீர்திருத்த ஆர்வலர்களின் முழுமையான ஒத்துழைப்புடன் தடைசெய்யப்பட்டிருந்தமை வரவேற்கத்தக்க விடயமாக காணப்படுகின்ற போதிலும் தற்போது கிராமங்களில் கசிப்பு உற்பத்தியானது பேசிப்படு பொருளாக மாறியுள்ளது.

நீர் நிலைகளை அண்டிய பகுதிகளில் ஈஸ்ற் மற்றும் பழவகை, துருப்பிடித்த இரும்புகள், யூரியா உரம் போன்றவற்றினை பயன்படுத்தி பல நாட்கள் நீரில் உறவைத்து வடிகட்டி வைக்கப்படுகின்ற கலவையினை நெருப்பில் சூடுகாட்டி கசிப்பு உற்பத்தி செய்யப்படுகின்றன.இது மனித உடலுக்கு முழுமையான பாதிப்பினை ஏற்படுத்தும் பானமாக கருதியமை காரணமாக பல கசிப்பு உற்பத்தி நிலையங்கள் கடந்த காலங்களில் முற்றுகை இடப்பட்டு சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக நீதிமன்றங்களின் ஊடக வழக்குகள் பதிவு செய்யப்பட்டமை மற்றும் பொது அமைப்புகளின் மூலமாக கசிப்பு உற்பத்தியின் தாக்கம் தொடர்பாக விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொண்டமையின் பலனாக கசிப்பு முழுமையாக ஒழிக்கப்பட்டன.தற்போதைய சூழ் நிலையில் பொது மக்களின் ஒத்துழைப்புடன் சில இடங்களில் சட்ட விரோதமான கசிப்பு உற்பத்தி நிலையங்கள் படையினரால் முற்றுகை இடப்படுகின்ற நிலை காணப்படுகின்றன.இதனை மேலும் பாதுகாப்புத்துறையினர் மேம்படுத்த வேண்டிய தேவையுள்ளதாகவும் பொது அமைப்புக்கள் சுட்டிக்காட்டுகின்றன.

தற்போது பேசு பொருளாக மாறியுள்ள உள்ளூர் கசிப்பு (வடி சாராயம்) உற்பத்தியினை கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு தேவையாக உள்ளதுடன் இது தொடர்பாக பாதுகாப்புத் துறையினரும் பொது மக்களின் நலன் கருதி நடவடிக்கையினை துரிதமாக முன்னெடுக்க வேண்டுமென பொது அமைப்புக்கள் கோரிக்கையினை முன்வைக்கின்றனர்.



# பெண்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்பு உதவியாக காரைதீவில் உபகரணங்கள் வழங்கி வைப்பு

(நூருல் ஹுதா உமர்)

கடல்வளம் சார்ந்த வீட்டிலிருந்து செய்யும் தொழில்கள் தொடர்பாக பெண்களை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காரைதீவு பிரதேச செயலகத்திற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட மகளிருக்கான சுயதொழில் ஊக்குவிப்பு உதவியாக கருவாடு பதனிடுவதற்காக ஐம்பதாயிரம் ரூபாய் பெறுமதியான உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன

சிறுவர் பெண்கள் விவகார அமைச்சினால் வழங்கப்பட்ட இந்த சுயதொழில் ஊக்குவிப்பு உதவியிணை தெரிவு செய்யப்பட்ட மகளிர்களுக்கு காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் மற்றும் உதவிப் பிரதேச செயலாளர் எஸ் பாத்தீபன் உட்பட காரைதீவு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் வழங்கி வைத்தனர்.

# நடமாடும் சேவையின் மூலம் கட்டுப்பாட்டு விலையில் அத்தியாவசியப் பொருட்களை பெற ஆவண செய்யவும்

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் சதொச மற்றும் பல நோக்கு கூட்டுறவு விற்பனை நிலையங்கள் உள்ள இடங்களில் அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட அத்தியாவசியப் பொருட்கள் வாங்கும் நிலை காணப்படுகின்ற போதும் பின் தங்கியுள்ள கிராமபுர மக்கள் இதன் விடயத்தில் பலன் அடையாதவர்களாக காணப்படுவதாக இவ் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கொரோனா காரணமாக நாடு முடக்கப்பட்டுள்ள நிலையில் போக்குவரத்துக்களும் அற்ற இவ்வேளையில் அரசாங்கத்தால் அத்தியாவசியப் பொருட்கள் சிலவற்றிற்கு நிர்ணயிக்கப்பட்ட விலையில் பொருட்கள் சதொச மற்றும் பல நோக்கு கூட்டுறவு சங்கங்களின் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் மேற்கூறிய இவ்விரு விற்பனை நிலையங்கள் இல்லாத கிராமபுர மக்கள் குறைந்த விலையில் அத்தியாவசிய பொருட்களை வாங்க முடியாத நிலையில் இருப்பதாக பல கிராமத்து மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதற்கமைய மன்னார் மாவட்டத்தில் மிகவும் பின்தங்கியுள்ள கிராமங்களில் ஒன்றான மாதா கிராமம் பகுதியில் சுமார் இருநூறு குடும்பங்களுக்கு மேல் அங்கு வசிப்பதாகவும் அப்பகுதியில் ஓரிரு கடைகள் தவிர தேவையான அத்தியாவசியப் பொருட்களை பெறக்கூடிய சதொச அல்லது பலநோக்கு கூட்டுறவு விற்பனை நிலையங்களோ அற்ற நிலைமையே காணப்படுவதாகவும்

இவ் பகுதி மக்கள் தங்களுக்கு தேவையான பொருட்களை கொள்முதல் செய்ய வேண்டுமானால் இருபது மைல் தூரத்திலுள்ள முருங்கன் பகுதிக்கே சென்று தங்களுக்க தேவையான பொருட்களை பெற வேண்டிய நிலை காணப்பட்டு வருவதாக தெரிவிக்கின்றனர்.

ஆகவே இக்கட்டான காலத்திலாவது வாரம் ஒரு முறையாவது நடமாடும் சேவையின் மூலம் அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.



# வழித்தெடுக்கப்படும்

# வடக்கு, கிழக்கு மண்வளம்

( துறையூர் சஞ்சயன் )



வளங்கள் பயன்படுத்தப்படுத்தப்பட வேண்டியவை. ஆனால் அந்த வளங்கள் கண்மூடித்தனமாக வழித்தெடுக்கப்படுமானால் வளங்கள் மாத்திரமல்ல வளங்களோடு இணைந்த ஏனைய வளங்களும் அழிந்து போய்விடும். அந்த வகையில் வடக்குகிழக்கு மண்வளம் கண்மூடித்தனமாகச் சூறையாடப்படுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டு. மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கில் மண் வளம் சூறையாடப்படுவது தொடர்பாக வினவியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

வடக்கு கிழக்கு மண்வளம் தென்னிலங்கை மட்டுமல்லாமல், மாலைதீவு போன்ற அயல் நாடுகளுக்கும் ஏற்றுமதிப் பொருளாகக் கொண்டு செல்லப்படுவதை அவதானிக்க முடிகிறது. உள்ளூர்த் தேவைகளுக்கு மண்ணை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு மக்கள் உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

அதிலும் வடகிழக்குப் பகுதியிலுள்ள ஏழைமக்களுக்கு மண்வளம் எட்டாக்கனியாக மாறிவரும் அதே வேளை வெளிநாடுகளின் தேவைக்கும் எமது பிராந்திய மண் சென்றடைகிறது. இந்த மண் மூலமாக சில அரசியல்வாதிகளும், அவர்கள் சார்ந்த ஒரு பகுதியினரும் அதிக வருவாயினை ஈட்டுகின்றனர். அதே வேளை ஒரு சில அதிகாரிகளும் மண் வேட்டைகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதன் மூலமாகக் கோடீஸ்வரர்களாக மாறியுள்ளனர். இந்த மண்வளம் மட்டக்களப்பில் இருந்து கனரக வாகனங்கள் மூலமாகத் தென்னிலங்கை சென்றடைகிற நிலைமாறி இப்போது தொடரூந்துகள் (புகையிரதவண்டி) மூலமாகவும் கொண்டு செல்லப்படுகின்றன.

இந்த மண் கடத்தல் வியாபாரத்தினைப் பொலிஸார் கண்டு கொள்வதாகத் தெரியவில்லை. மண் வளம் அகழப்படுகின்றபோது பல பிரச்சினைகள், கேடுகள் ஏற்படுகின்றன. அந்த வகையில் ஆறுகள் ஆழ, அகலமாக்கப்படுகின்றன.

வயல் நிலங்கள் ஆழமான பாரிய குழிகளாக்கப்படுகின்றன. மரங்கள், செடிகள் அழிக்கப்படுகின்றன. வீதிகள் உடைந்து சிதைவுக்குள்ளாக்கப்படுகின்றன. கண்டல் நிலத்தாவரங்கள் அற்றுப்போகும் நிலை ஏற்பட்டுள்ளது. நிலத்தடிநீர் மேலும் இறங்குவதால் குடிநீர்த்தட்டுப்பாடு, வயல்களுக்கான பாய்ச்சல் நீர்த்தட்டுப்பாடு ஏற்படுகின்றது. மட்டக்களப்பில் செங்கலடி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வேப்பவெட்டுவான் கிராமத்தை அண்டிய காரக்காடு என்னுமிடத்தில் நிலத்திற்குக் கீழ் இருந்து மண்ணகழப்பட்டு (கொட வெலிய) தென்னிலங்கைப் பக்கமாகக் கொண்டு செல்லும் பாரிய வியாபாரம் நடைபெறுகிறது. இப்படியான வியாபரிகள் அயல் மாவட்டம் சார்ந்தவர்களாக இருப்பதனால் குறித்த மாவட்டம் பற்றியோ, சூழல் கேடுகள் பற்றியோ சிந்திப்பதில்லை.


வேப்ப வெட்டுவான் பிரதேசம் ஏற்கனவே குடிநீர்த்தட்டுப்பாடு அதிகமாகவுள்ள பிரதேசமாகும். இந்நிலையில் நிலத்தடி மண் ஆழமாக அகழப்பட்டு எடுக்கப்படுமாயின் மேலும் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. மாமூல்களைக் கொடுக்க வேண்டிய இடங்களுக்குக் கொடுத்து விட்டால் எங்கும் எதையும் செய்யலாம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

நாட்டில் கொரோனா காரணமாக மாவட்ட மாகாண முடக்கங்கள், அவசரகாலச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டாலும் மண் வியாபாரம் தங்கு தடைகள் இன்றி நடைபெறுகின்றன. முன்பு மண்ணகழும் இடங்கள், கொண்டு செல்லும் பாதைகள் எல்லாவற்றிலும் அனுமதிப்பத்திரங்கள் தேவை என்ற நிலைமை காணப்பட்டது. இப்போது கொண்டு செல்லும் வீதிகளுக்கு அனுமதிப்பத்திரம் தேவையற்றது என்ற ஏற்பாடு 2020 இன் பின்னர் நடைமுறைக்கு வந்ததால் மண் வியாபாரம் இலகுவாக்கப்பட்டுள்ளது.

வளங்களை அழித்துச் செய்யப்படும் வருவாய் ஈட்டம், அபிவிருத்தி என்ற மாயைகள் பிரதேசங்களை அழித்துவிடும். பசுமையான பிரதேசங்களைப் பாலைவனமாக்கும் செயற்றிட்டங்களால் நமது நாடு ஒரு போதும் சிங்கப்பூராக மாறாது. சோமலியா, எத்தியோப்பியாகவே மாறும். ஐந்து ஆண்டு கால ஆட்சியில் எதையாவது செய்து விட்டுச் ஆட்சியாளர்கள் செல்லலாம், நாட்டையும் விட்டுப் போகலாம். ஆனால் கஷ்டங்களை அனுபவிக்கப்போகிறவர் ஊரே தஞ்சம், மாவட்டமே தஞ்சம் என்று வாழப்போகின்ற ஏழை மக்களும், பிரதேசப் பற்றாளர்களும் மட்டுமே என்பதுதான் உண்மை.

அண்மையில் செங்கலடிப் பிரதேச இலுபடிச்சசேனை ஊரைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் உழவியந்திரத்தில் உள்ளூர்த் தேவைக்காக மண்ணை ஏற்றி வந்தபோது சிவில் உடையணிந்த படைச்சிப்பாய் ஒருவர் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் முள்ளந்தண்டு சுவாசப்பைப்பகுதிகள் பாதிக்கப்பட்ட நிலையில், மட்டக்களப்புப் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அதனை இப்போது தவறுதலான துப்பாக்கிப் பிரயோகம் என்று படையினர் விளக்கம் அளிக்கிறார்கள். சட்டம் சிலந்தி வலை போன்றது. அது வண்டுகள், குழவிகளைத் தடுக்காது, அற்ப பூச்சிகளையே சிக்க வைக்கும் அது தான் இந்தக் துப்பாக்கிப் பிரயோகத்தின் விளக்கம். பாரியளவான மண் வியாபாரிகள் தங்கு தடையின்றி எல்லாம் செய்கிறார்கள். ஏழை எளியதுகளே தண்டனை பெறுகிறார்கள்.

சூழலியல் ஆய்வாளர்கள், ஆர்வலர்கள், பாதுகாவலர்கள், உத்தியோகத்தர்கள் இந்த விடயம் தொடர்பாக ஆழமான கவனம் செலுத்த வேண்டும். மண் வளமற்ற மட்டக்களப்பை நோக்கி மூடத்தனமான பயணத்தைத் தடுக்க முன் வாருங்கள். கிழக்கிருப்புவாதிகளும் மண் வியாபாரத்தின் பங்குதாரிகளாகி விட்டார்களோ என்ற நியாயமான சந்தேகம் மக்களிடம் உள்ளது என்றார்.







# நாட்டில் கோரோனா வைரஸின் தாண்டவம் அதிகரிக்க மக்களின் அசமந்த போக்கே காரணம்


ந.குகதர்சன்

நாட்டில் கொரோனா வைரஸின் தாண்டவம் அதிகரித்த வண்ணமே உள்ளதே தவிர குறையும் சந்தர்ப்பம் அரிதாகவே காணப்படுகின்றது. பொதுமக்களின் பங்களிப்பே இதற்கு முக்கிய காரணம் வகிக்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பதினான்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் கொரோனா தொற்றாளர் அதிகரித்து காணப்படும் நிலையில், கொரோனா தொற்றால் மரணங்களும் தொடர்ச்சியாக இடம்பெற்று காணப்படுகின்றது.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான வீதிகளை பொறுத்த வரையில் ஊரடங்கு இல்லாத காலப்பகுதியில் எவ்வாறு காணப்பட்டதோ அதற்கு அதிகமான மக்களின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுகிறது. பெரும்பாலானோர் போலியாக அத்தியாவசிய சேவைகள் நிமித்தம் என்ற போர்வையில் சுகாதார தரப்பினர், பாதுகாப்பு தரப்பினர் மற்றும் குடும்பத்தினரையும் ஏமாற்றி வீதிகளில் வலம் வந்து கொண்டிருக்கின்றனர்.

கொவிட் 19 தொற்று தற்போது வேகமாக பரவி வருவதால், இயலுமான அளவு பொதுமக்கள் இரண்டு முகக் கவசங்களை அணியுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் வீட்டில் இருந்து வெளியே செல்கின்ற சந்தர்ப்பத்தில் ஃபேஸ் ஷீல்ட் கவசம் ஒன்றை அணிவதும் மிக முக்கியம் என ஆரம்ப சுகாதார மற்றும் கோவிட் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

இதேவேளை பொதுமக்கள் தடுப்பூசியின் வகையை பொருட்படுத்தாமல், நாட்டில் கிடைக்கிறது ஏதாவது ஒரு வகையான தடுப்பூசியை, அருகிலுள்ள தடுப்பூசி நிலையம் ஒன்றிற்கு சென்று மிகவும் விரைவாக பெற்றுக் கொள்ளுமாறும் அவர் பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டார்.

ஆனால் பெரும்பாலானோர் தடுப்பூசிகளை செலுத்தி வந்தாலும், சிலர் ஓரிருவர்களின் போலியான வார்த்தைப் பிரயோகத்தினை நம்பி கொரோனா தடுப்பூசிகளை செலுத்தாமல் இருப்பது மிகவும் கவலைப்படும் செயலாக காணப்படுகின்றது. இதில் அனைவரும் ஒருமித்து செயற்படும் பட்சத்தில் கொரோனா தொற்று குறையும் நிலைமை உருவாகலாம்.

மக்கள் அனைவரும் தங்களது வீடுகளில் பாதுகாப்பாக இருக்குமாறு வேண்டிக் கொள்வதோடு தங்களுக்கு ஏதாவது கொரோனா தொடர்பான அறிகுறிகள் இருப்பின் உடனடியாக தங்களது பிரதேச பொது சுகாதார பரிசோதகரை அல்லது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தை தொடர்புகொள்ளவும். உங்கள் குடும்பத்தினரை இந்த கொடிய நோயினால் ஏற்படும் மரணங்களில் இருந்து காப்பாற்றிக் கொள்ளுங்கள் என சுகாதார திணைக்களத்தினர் அறிவுறுத்தல் வழங்கி வருகின்றனர்.

கொரோனா தொற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் மோசமான நிலையில் பரவி வரும் நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பெறுமதி மிக்க உயிர்களை இழந்து நிற்கின்றோம். இந்த நிலையில் நாம் ஒவ்வொருவரும் இந்த கொரோனா நோயில் இருந்து பாதுகாப்பு பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் மிகவும் பாதுகாப்பான முறையில் சுகாதார தரப்பினர் தெரிவித்த வழிமுறைகளை பின்பற்றி நடப்பது கட்டாயமாகும்.

வீடுகளில் இருந்து கட்டாய தேவை ஏற்பட்டால் மாத்திரம் ஒருவர் மாத்திரம் வெளியில் சென்று சுகாதார தரப்பினரின் வழிமுறையை பின்பற்றி வீடு திரும்புவது கட்டாயமாகும். எதற்காக வெளியில் திரிகின்றோம் என்றில்லாமல் சிலர் வீதியில் திரிவதை அவதானிக்க முடிகின்றது. இவர்களை பார்;க்கும் போது மிகவும் கவலையாகவுள்ளது. ஓர் குடும்ப ஆண் தனது மனைவி மற்றும் பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு உறவினர் வீடு, வர்த்தக நிலையங்கள் என்று திரிகின்றனர் என்னதான் முக்கிய தேவையாக இருந்தாலும் எதற்காக அனைவரும் திரிய வேண்டும்.

**இன்றைய காலத்தின் தேவையை கருத்திற்கொண்டு நாம் திரிவதால் நமக்கு நோய் தாக்கம் ஏற்படும் அல்லது நாம் பழகுபவர்களுக்கு நோய் தொற்று உண்டாகும் என்ற அச்சத்தில் நாம் ஒவ்வொருவரும் வாழப் பழகிக் கொள்வது இன்றைய காலத்தின் கட்டாயமாகும். இன்று அதிகமான இளைஞர்கள் வீதிகளில் தங்களது பொழுதுகளை போக்குகின்றனர் கூட்டம் கூட்டமாக நின்று கிரிக்கட் விளையாடுவதை பார்க்கும் போது இளைஞர் சமூகம் ஏன் இவ்வாறு நடந்து கொள்கின்றார்கள் என்ற அச்சம் ஏற்படுகின்றது.**

இன்றைய காலத்தின் தேவையை கருத்திற்கொண்டு நாம் திரிவதால் நமக்கு நோய் தாக்கம் ஏற்படும் அல்லது நாம் பழகுபவர்களுக்கு நோய் தொற்று உண்டாகும் என்ற அச்சத்தில் நாம் ஒவ்வொருவரும் வாழப் பழகிக் கொள்வது இன்றைய காலத்தின் கட்டாயமாகும். இன்று அதிகமான இளைஞர்கள் வீதிகளில் தங்களது பொழுதுகளை போக்குகின்றனர் கூட்டம் கூட்டமாக நின்று கிரிக்கட் விளையாடுவதை பார்க்கும் போது இளைஞர் சமூகம் ஏன் இவ்வாறு நடந்து கொள்கின்றார்கள் என்ற அச்சம் ஏற்படுகின்றது.

வெளியில் திரிவதற்கு அனுமதி உள்ளது என்பதற்காக பெரும்பாலானர்கள் அதனை எந்நேரமும் நாங்கள் வெளியில் செல்லலாம் என்ற எண்ணத்தில் திரிவதும் மிகவும் கவலையாகவுள்ளது. தங்களது திணைக்களத்தில் அல்லது அத்தியாவசிய சேவைக்கு என வழங்கப்பட்ட ஆவணங்களை கொண்டு எங்களுக்கு இராணுவமோ பொலிஸாரோ எதுவும் செய்ய மாட்டார்கள என்ற நம்பிக்கையில் வெளியில் திரிவதுதான் மிகவும் கவலையான விடயமாகும்.

தற்பொழுது மக்கள் சீனி பெற்றுக்கொள்ள வரிசையில் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டு காணப்படுகின்றது. இவ்வாறான ஓர் நிலையில் எதிர்வரும் நாட்களில் நாட்டில் சீனிக்காக வரிசையில் காத்திருந்த காரணத்தினால் ஓர் கோவிட் கொத்தணி உருவாகும் அபாயம் காணப்படுகின்றது என முறத்தட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

சீனிக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்து அரசாங்கம் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது. இதன்படி நாடு முழுவதிலும் உள்ள சதொச நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு சங்கத்தின் ஊடாக குறைந்த விலையில் சீனியை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த விடயம் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்திலும் பெரும்பாலான மக்கள் வரிசையாக நின்று சீனியை பெற்றுக் கொள்ள காத்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. இதுவும் கொரோனா தொற்றினை அதிகரிக்கும் செயலினை தூண்டும் வகையில் காணப்படுகின்றது.

எனவே மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படும் மக்கள் தங்களையும், தங்கள் குடும்பத்தினையும், மாவட்டத்தினையும் கொரோனா தொற்றில் இருந்து முற்றாக காப்பாற்ற அனைவரும் சிந்தித்து செயற்படுங்கள். இல்லையேல் நம்மையும் நமது குடும்பத்தையும் முதலில் காப்பாற்ற முடியாத நிலை உருவாகலாம்

# மக்கள் ஒத்துழைப்பு வழங்கினால் விரைவில் தோற்றை கட்டுப்படுத்தலாம்

## வைத்தியர் ஜி.சுகுணன்

(நூருல் ஹுதா உமர், பாறூக் சிஹான்)




கொரோனா பொதுமுடக்கம் காரணமாக தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்து வருகின்றது எனவே மக்கள் ஒத்துழைப்பு வழங்கினால் விரைவில் தொற்றை கட்டுப்படுத்தலாம் என கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜி. சுகுணன் தெரிவித்தார்.

நேற்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது

கல்முனை பிராந்தியத்தில் 500 கொரோனா தொற்றாளர்கள் அளவில் இப்போது சிகிச்சை பெற்று வருகின்றனர். அதில் 100 பேர் வைத்தியசாலையிலும் இன்னும் 100 பேர் இடைத்தங்கல் நிலையங்களிலும் மேலும் 300 பேரளவில் வீடுகளிலும் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர். கல்முனை பிராந்தியத்தில் தடுப்பூசி ஏற்ற தகுதியானோரில் 95 சதவீதமானோர் முதலாவது தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டுள்ளதுடன் ஏனையோருக்கான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளும் நடமாடும் முறையில் இடம்பெற்று வருகிறது. இரண்டாம் தடுப்பூசியை இதுவரை %5சதவீதமானோர் பெற்றுக்கொண்டுள்ளதுடன் ஏனையோருக்கான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளும் மும்முரமாக நடைபெற்று வருகிறது.

கடந்த ஒன்றரை வருடங்களாக மூடப்பட்டிருக்கும் பாடசாலைகளை சரியான பொறிமுறையொன்றை நிறுவி மீளத்திறக்க அரச உயர்மட்டத்தில் பல்வேறு கலந்தாலோசனைகள் இடம்பெற்று வருகிறது. நாட்டின் பொருளாதாரம்இ கல்விஇ வர்த்தகம்இ தொழிற்சாலைகள் என்பன விரைவாக சாதாரண நிலைக்கு திரும்ப தங்களின் முழு அர்ப்பணிப்பை சுகாதாரத்துறை வழங்கிவருகிறது. ஏனைய துறையினரும் பொதுமக்களும் தமது முழு ஒத்துழைப்பை வழங்கினால் நாம் கொரோனா தொற்றை விரைவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும்.

கொரோனா ஆரம்பித்த சீனா இலங்கையில் அதிகமான கொரோனா நோயாளர்கள் அடையாளப்படுத்தப்பட்ட பெலிய கொட கிழக்கில் அக்கரைப்பற்று என கொரோனா தொற்றாளர்கள் அதிகமாக மீன்சந்தைகளிலேயே அடையாளம் காணப்பட்டனர். அந்த வரிசையில் மாளிகைக்காடு பிரதேச மீன் சந்தையும் இணைந்து கொள்ள கூடாது என்பதே எங்களின் எதிர்பார்ப்பாகும். மாதக்கணக்கில் பாவித்த முகக்கவசங்களுடன் சிலரும் முகக்கவசங்களை ஒழுங்கான முறையில் அணியாமல் சிலரும் சந்தைகளில் உலாவித்திரிவது பாரிய ஆபத்தை பொது மக்களுக்கு உண்டாக்கும்.

கடந்த ஒன்றரை வருடங்களாக மூடப்பட்டிருக்கும் பாடசாலைகளை சரியான பொறிமுறையொன்றை நிறுவி மீளத்திறக்க அரச உயர்மட்டத்தில் பல்வேறு கலந்தாலோசனைகள் இடம்பெற்று வருகிறது. நாட்டின் பொருளாதாரம், கல்வி, வர்த்தகம், தொழிற்சாலைகள் என்பன விரைவாக சாதாரண நிலைக்கு திரும்ப தங்களின் முழு அர்ப்பணிப்பை சுகாதாரத்துறை வழங்கிவருகிறது. ஏனைய துறையினரும் பொதுமக்களும் தமது முழு ஒத்துழைப்பை வழங்கினால் நாம் கொரோனா தொற்றை விரைவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும்

இதுவரை கல்முனை பிராந்தியத்தில் 6800 பேரளவில் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அதில் 15% பேர் இறந்துள்ளனர். கடந்த 24 மணித்தியாலங்களில் 50க்கும் குறைவானவர்களே தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் ஒரு இறப்பு சம்பவம் மட்டுமே பதிவாகியுள்ளது இதன்மூலம் பிராந்தியத்தில் பாதுகாப்பான தெளிந்த நிலை உள்ளதை அவதானிக்க முடிகிறது. இந்த நிலை பொதுமுடக்கம் அமுலில் உள்ளதனால் கிடைத்த பெறுபேறாகவே நோக்க முடிகிறது. பொதுமுடக்கம் தளர்த்தப்பட்டு மக்கள் இயல்பு நிலைக்கு திரும்பினால் அதனால் உண்டாகும் பாதிப்பின் எதிரொலியை காணலாம் என்றார்.

# ஆயுர்வேத மருந்து போதி வழங்கல் அறிமுக நிகழ்வு



(வி.சுகிர்தகுமார் )

நிந்தவூர் அரச ஆயுர்வேத ஆராய்ச்சி தொற்றா நோய் வைத்தியசாலையினால் கொரோனா தொற்று காரணமாக வீடுகளில் சுயதனிமைப்படுத்தப்பட்டவர்களின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் பாரம்பரிய ஆயுள்வேத முறைகளுக்கமைய தயாரிக்கப்பட்ட ஆயுர்வேத மருந்து பொதி வழங்கல் அறிமுக நிகழ்வும் 'சுவ தாரணி' ஆயுர்வேத மருந்து கொடியின் பணிப்புரைக்கமைய ஆயுர்வேத ஆணையாளர் வைத்தியர் தம்மிகவின் வழிகாட்டலின் அடிப்படையிலும் கொரோனா தொற்றுநோயை மக்கள் மத்தியிலிருந்து ஒழிக்கும் தேசிய வேலைத்திட்டத்திற்கு அமைவாக இந்நிகழ்வு இடம்பெற்றது.

நிந்தவூர் அரச ஆயுர்வேத ஆராய்ச்சி தொற்றா நோய் வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர்



வழங்கும் நிகழ்வும் புனித தீகவாபி பரிவார சைத்தியில் இன்று முதல் முறையாக இடம்பெற்றது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கமைய கொரோனா தொற்றுநோயை மக்கள் மத்தியிலிருந்து ஒழிக்கும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் சுதேச மருத்துவ அபிவிருத்தி கிராமிய மற்றும் ஆயுள்வேத வைத்தியசாலைகள் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சர் சிசிர ஜெயக்கொடியின் பணிப்புரைக்கமைய ...

கே.எல்.எம்.நக்பரின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தீகவாபி பரிவார சைத்தியின் வணக்கத்துக்குரிய போதிவெல சந்திரானந்த ஹிமி மற்றும் 241 ஆம் படைப்பிரிவின் கட்டளை அதிகாரி பிரிகேட் கொமாண்டர் ஏ.எம்.சி.அபயகோன் நீத்தை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி உள்ளிட்ட கிராம உத்தியோகத்தர்கள் கலாசார உத்தியோகத்தர் எம்.எஸ். ஜெளபர் ஆயுர்வேத வைத்தியசாலை ஊழியர்கள் என சிலர் கலந்து கொண்டனர்.

குறித்த வைத்தியசாலையினால் இதுவரை சுமார் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மருந்து பொதிகள் அம்பாறை மாவட்டம் முழுவதும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள நிலையில் முதல் தடவையாக கொரோனா தொற்று காரணமாக வீடுகளில் சுயதனிமைப்படுத்தப்பட்டவர்களின் நலன்கருதி அவர்களின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் நோக்குடனேயே இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

இதன்போது வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் கே.எல்.எம்.நக்பரினால் ஆயுர்வேத வைத்திய முறைகள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டதுடன் கொத்தமல்லி, மரமஞ்சள், சுக்கு மற்றும் ஹீன்அரத்த நிலவேம்பு போன்ற கலவையைக் கொண்டு தயாரிக்கப்படும் ஆயுள்வேத பானத்தை அருந்தும் முறைகள் பற்றியும் தெளிவுபடுத்தப்பட்டது. அத்தோடு கொரோனா தொற்றுக்குள்ளாகி வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு குறித்த மருந்து பொதி தக்க பயனை தரும் எனவும் குறிப்பிடப்பட்டது.

இதே நேரம் நிகழ்வில் கலந்து கொண்ட தீகவாபி பரிவார சைத்தியின் வணக்கத்துக்குரிய போதிவெல சந்திரானந்த ஹிமி நிந்தவூர் அரச ஆயுர்வேத ஆராய்ச்சி தொற்றா நோய் வைத்தியசாலையினால் முன்னெடுக்கப்படும் பணிகள் தொடர்பில் பாராட்டு தெரிவித்ததுடன் இப்பணியை தொடர்ந்தும் முன்னெடுக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

# ஆவணி மாத விநாயகர் சதுர்த்தி தின நிகழ்வு

(பைஷல் இஸ்மாயில் )



ஆவணி மாத விநாயகர் சதுர்த்தி தினத்தை சிறப்பிக்கும் வகையில் கிழக்கு மாகாண சபை வளாகத்தில் அமைந்துள்ள மகா விநாயகர் வழிபடும் நிகழ்வு நேற்று கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதர் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது ஆலைய குருக்கள் டில்காந்தனினால் விசேட பூசை நிகழ்வுகள் நடாத்தி வைக்கப்பட்டதுடன், இந்த விஷேட வழிபாட்டு நிகழ்வில் மட்டுப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டதுடன் சுகாதார வழிமுறைகளும் பின்பற்றி இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

# திருமலையில் சூறையாடப்படும் கடல் வளம் சட்டவிரோத கடல் மணல் அகழ்வு



## பாதுகாக்கப்படுமா திருமலையின் சுற்றுலா பிரதேசம்

( திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை குச்சவெளி பிரதேசத்தில் சுற்றுலா மையமான (RED ROCK) என்று அழைக்கப்படும் தேவி கல் பிரதேசத்திலுள்ள கடற்கரையில் கடல் வளங்கள் நாசமடைவதாகவும் சட்டவிரோதமாக பாரிய அளவு கடல் மணல் அகழ்வதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்

இலங்கையின் மிகவும் அழகான இடங்களாக இனங்காணப்பட்ட பத்து இடங்களில் ஒன்றான திருகோணமலை குச்சவெளி பிரதேசத்தில் அமைந்துள்ள கீஉ ஈ கீநி இஒ என்றழைக்கப்படும் தேவிகள் பிரதேசமும் ஒன்றாகும்

RED Rock தேவி கல் என்றழைக்கப்படும் பிரதேசம் அழகிய செம்பாறைகளை கொண்ட கரையோரத்தில் அழகிய மணல் மேடால் காணப்படும் சுற்றுலா பயணிகளை கவரக்கூடிய இடமாகும்

அவ்வாறு காணப்படும் கடற்கரை பிரதேசத்தில் பாரிய அளவு கடல் மணல் சூறையாடப் படுவதாகவும் அப்பிரதேசத்தில் கடல் அரிப்பு ஏற்படுவதற்கான சாத்தியம் இருப்பதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்

தேவி கல் பிரதேசத்தை அண்டிய கடற்கரை பிரதேசம் அரசாங்கத்தினால் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திதிற்கு ஒதுக்கப்பட்டுள்ள காணியின் எல்லைப்புறத்தில் மணல் அகலப்பட்டு வருகின்றது

இவ்வாறு அவலப்படும் கடல் மணலானது திருகோணமலை புல்மோட்டை கனியவள கூட்டுத்தாபனத்திற்கு கொண்டு செல்ல படுவதாகவும் அவ்வாறு அரசாங்க கூட்டுத்தாபனம் ஒன்றுக்கு கொண்டு செல்லப்படும் மணலானது தனியார் ஒருவருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டு சரியான முறையில் அகலப்படாமல் சட்டவிரோதமான முறையில் கடல் மணல் அகலப்படடுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பாக பிரதேச வாசி ஒருவர் கருத்து தெரிவிக்கையில்...

தேவி கல் கடற்கரை பிரதேசமானது நிழல் தரக்கூடிய பெரிய மரங்களால் சூழப்பட்ட அழகிய கடற்கரை பிரதேசமாக இருந்ததாகவும் சுற்றுலாத் துறைக்கு மிகவும் முக்கியமான பிரதேசமாகவும் உள்நாட்டில் மட்டுமல்லாது வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இப்பிரதேசத்தில் அதிக அளவில் வந்து செல்வதாகவும் தெரிவித்தார்



மேலும் இக் கடற்கரை பிரதேசத்தில் முக்கிய அம்சமாக செந்நிற கற்பாறைகள் காணப்படுவதுடன் கடற்கரை மணல் கடலிலிருந்து சுமார் 500 மீட்டருக்கும் மேலான மணல் பிரதேசமாக இருந்ததாகவும் தெரிவித்தனர்

கடந்த 2004ஆம் ஆண்டு சுனாமி பேரலையின் போது இப்பிரதேசத்தில் கடல் நீர் கரையிலிருந்து சுமார் ஒரு கிலோமீட்டர் தூரத்தில் கூட பாதிப்பு ஏட்படுத்தவில்லை எனவும் அதனால் இப்பிரதேசத்தில் சுனாமியினால் எவரும் பாரியளவில் உயிரிழக்கவில்லை எனவும் கரணம் இப்பிரதேசத்தில் காணப்பட்ட கடற்கரை மணல் மேடும் எனவும் பிரதேசவாசி ஒருவர் தெரிவித்தார்.இருப்பினும் தற்போது இந்த கடல் கரை பிரதேசத்தில் சட்டவிரோதமாக மரங்கள் வெட்டப்பட்டு பாரியளவு கடல் மணல் அகழ்வதாகவும் மணல் அகழ்வினால் கரைப்பரப்பு கடலரிப்பினால் இல்லாமல் போயுள்ளதாகவும் இனிவரும் காலங்களில் அடை மழை பெய்தால் அல்லது கடலரிப்பு ஏற்பட்டாலோ மக்கள் குடியிருப்புக்குள் கடல் நீர் புகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் பிரதேசவாசிகள் விசனம் தெரிவித்தனர்

மேலும் நாளொன்றுக்கு 25 தொடக்கம் 30 டிப்பர் வாகனங்களில் இவ்வாறு மணல் ஏற்றி செய்வதாகவும் விதிகள் பெரிதும் சேதமடைந்து காணப்படுவதாக தெரிவித்த்னர்

இது தொடர்பாக குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் ஏ முபாரக் அவர்களிடம் வினவியபோது இவ்வாறு கருத்து தெரிவித்தார்...

திருகோணமலை குச்சவெளி பிரதேச தேவி கல் பிரதேசமானது பாரியளவு சுற்றுலா பயணிகளை கவரக்கூடிய இடமாக காணப்படுவதாகவும் இவ்வாறு கடல் மணல் அகலப்படும் பிரதேசமானது தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு சொந்தமான காணியின் எல்லைப்புறத்தில் புல்மோட்டை கனியவள கூட்டுத்தாபனத்தின் ஏட்பாட்டில் தனியார் ஒருவருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டு இவ் மணல் அகழ்வு பணி மேற்கொள்ளப்படுவதாகவும் இதுதொடர்பாக குச்சவெளி பிரதேச சபையிடம் எவ்வித அனுமதியும் பெறவில்லை எனவும்தெரிவித்தார்

மேலும் அப்பிரதேசத்தில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு செய்யப்படுவதாகவும்,அரசாங்க காணியினை தனியார் ஒருவர் உரிமம் கோரியது தொடர்பாகவும் திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்திலும் திருகோணமலை மேல் நீதிமன்றத்திலும் குச்சவெளி பிரதேச சபையினால் வழக்கு தொடரப்பட்டு அவ்வழக்கு நிலுவையில் இருக்கும் சந்தர்ப்பத்தில் இவ்வாறு பாரிய அளவு கடல் மணல் அகலப்பட்டு வருவதாகவும் குற்றம் சுமத்தினார்

புல்மோட்டை கனியவள கூட்டுத்தாபனத்தினால் கடல் மணல் ஆளப்படுமானால் கடல் மட்டத்திலிருந்து 100 மீட்டருக்கு அப்பால் மாத்திரமே மணல் அகப்பட வேண்டுமெனவும் அதனை மீறி குச்சவெளி தேவி கல் பிரதேசத்தில் கடல் மட்டத்திலிருந்து 6 அடி மட்டுமே மீதம் வைத்து சுமார் 10 அடி ஆழம் வரை இவ்வாறு மணல் அகலப்படுவதாகவும் இதனால் அப்பிரதேசம் பாலைவனம் போல் மணல் மேடுகளாக காணப்படுவதாகவும் அப்பிரதேச மக்களினால் தமக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றதாகவும் குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் ஏ.முபாரக் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் குச்சவெளி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவது மற்றும் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும் சந்தர்ப்பத்தில் பிரதேசத்தில் இவ்வாறு மண வாழ்வில் ஈடுபடுவது தம்மால் அனுமதிக்க முடியாது எனவும் உரிய அதிகாரிகள் இதனை உடன் நிறுத்தி இப்பிரசித்தி பெற்ற சுற்றுலா பிரதேசத்தினை பாதுகாத்து தருமாறும் இதன்போது சுட்டிக் காட்டினார்.



## மணல் உரிமம் வழங்குவதற்கான புதிய வழிமுறை



( இஃஜாஸ் ஏ பரீட்)

மணல் கடத்தல்காரர்களிடமிருந்து மணல் கடத்தலை காப்பாற்ற மற்றும் கூட்டுறவு சங்கங்களை நிறுவுவதற்கும் மணல் உரிமம் வழங்குவதற்கும் ஒரு விசேட திட்டம் தயாரிக்கப்படும் என்று சுற்றுச்சூழல் அமைச்சர் மஹிந்த அமரவீர நேற்று காலை கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்துடன் நடந்த சிறப்பு கூட்டத்தில் தெரிவித்தார்.

குறைந்த வருமானம் ஈட்டுபவர்கள் கிழக்கு மாகாணத்தில் தற்போதுள்ள சுற்றுச்சூழல் பிரச்சினைகளைத் தீர்க்க தேவையான முடிவுகளை எடுக்க ஆளுநரின் தலையீட்டில் ஜூம் தொழில்நுட்பம் மூலம் கூட்டம் நடைபெற்றது.

தற்போது நாட்டிற்கு தேவையான மணலின் அளவு பொலன்னறுவை மாவட்டம் மற்றும் கிழக்கு மாகாணத்தில் இருந்து பெறப்படுவதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பல முக்கிய சுற்றுச்சூழல் பிரச்சினைகள் எழுந்திருப்பதை அமைச்சர் ஒப்புக் கொண்டார்.

திருகோணமலை மாவட்டத்தில் 300 உரிமையாளர்கள் மணல் எடுக்க அனுமதி வழங்கப்பட்ட போதிலும், கடந்த ஆண்டு மட்டும் 1300 உரிமையாளர்கள் வழங்கப்பட்டதாக அமைச்சர் கூறினார்.

எதிர்காலத்தில் இந்த நிலையை மாற்ற தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார். உரிமம் வழங்குவதில் முறைகேடுகள் நடைபெறுவதற்கு முக்கிய காரணம் கிழக்கு மாகாணத்தில் மிகவும் ஊழல் நிறைந்த அதிகாரிகள் தனது மாகாணத்திற்கு வருவதாகும். அரசியல் அதிகாரிகளின் குறிப்பிட்ட ஆதரவுடன் இத்தகைய அதிகாரிகள் அரசாங்கத்திற்கும் நாட்டிற்கும் அவப்பெயரை ஏற்படுத்தும் என்றும் ஆளுநர் கூறினார்.

ஒரு குழு மூலம் உரிமம் வழங்குவதே இதற்கான சிறந்த தீர்வு, என்றார்.

இந்தச் சந்திப்பின் போது, கிழக்கு மாகாணத்தில் சட்டவிரோதமாக மணல் அகழ்வதாக பாராளுமன்றத்தில் அண்மையில் குற்றம் சாட்டிய திரு. எந்த வெளிநாட்டிற்கும் மணல் அனுப்பப்படவில்லை என்று அமைச்சர் வலியுறுத்தினார்.

நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்ய போதுமான மணல் இருப்பு இல்லை என்று அவர் மேலும் கூறினார்.

கூட்டத்தில் சுற்றுச்சூழல் ஆணையம், வனத்துறை, புவியியல் மற்றும் சுரங்க பணியகம் மற்றும் கிழக்கு மாகாணத்தின் தலைமை செயலாளர், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட செயலாளர்கள் மற்றும் ஆளுநரின் செயலாளர் ஆகியோரை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# தமிழ்த் தேசியத்தை வாழ்வித்த பெருந்தலைவர் சி.மூ.இராசமாணிக்கம்

பல இன, மத, மொழி, பண்பாடுகளைக் கொண்ட நாட்டுக்குப் பொருத்தமான அரசமைப்பு கூட்டாட்சி (சமஷ்டி) என்பது அரசியல் ஆய்வாளர்களின் கருத்து. இந்த அடிப்படையிலே தான் இலங்கையின் அரசிலமைப்பு இருக்க வேண்டும் என தந்தை செல்வா சென்னார். நாட்டில் ஒற்றுமை, ஒருமைப்பாடு, ஒரு பிரதேசத்தை இன்னுமொரு பிரதேசம் சுரண்டாதிருத்தல் என்ற விழுமியங்கள் பேணப்படும். ஒட்டுமொத்த நாடும் முன்னேற்றமடையவும், நாட்டில் தேசிய உணர்வு செழிப்படையவும் இதுவே சிறந்த முறைமை என உறுதி பூண்டார். இதை அவர் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸில் இருக்கும் போதே கூறினார்.

1947 ஐப்பசியில் யாழ் முற்றவெளியில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் பரப்புரைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூட்டாட்சி பற்றிப் பேசும்படி தந்தை செல்வாவை ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்கள் கேட்டுக்கொண்டார். அதன்படியே செல்வாவும் பேசினார். சமகாலத்தில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் மூதவை உறுப்பினர் ஈ.எம்.வி.நாகநாதன் அவர்களும் மூதவையில் கூட்டாட்சி பற்றி விரிவான உரையொன்றை நிகழ்த்தியிருந்தார்.

ஆனால் 1948ல் சோல்பரி ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்ட போது நம்மவர் எவரும், கூட்டாட்சி முன்மொழிவைச் செய்யாதிருந்தமை அபாக்கியமே. இது தொடர்பில் தந்தை செல்வாவும் தன் வருத்தத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தோற்றத்தைத் தொடர்ந்து வடக்கு கிழக்கெங்கணும் கூட்டாட்சிக் கொள்கை பரப்புரை செய்யப்பட்டது. ஆரம்ப காலத்தில் பல்வேறு எதிர்ப்பலைகள் தோன்றின. மக்களின் ஆர்வம் இக்கொள்கையின்பால் இருந்ததால் எதிர்ப்புகள் அடங்கின. வடக்கில் போலவே கிழக்கிலும் கூட்டாட்சியின் தேவை உணரப்பட்டு மக்கள் ஆதரவு பெருகியது. கிழக்கிலே இம்முயற்சியின் முன்னணிச் செயற்பாட்டாளர்களில் முதன்மை பெற்று விளங்கியவர்களில் அமரர் சி.மூ.இராசமாணிக்கம் அவர்களும் ஒருவராவார்.

கிழக்கில் தமிழரசுக் கொள்கையைப் பரப்புதலில் ஒரு மிகப் பெரிய தடை இருந்தது. அதுவே, யாழ் எதிர்ப்புக் கோட்பாடு. தங்கள் அரசியற் கருத்துக்களைத் தெளிவுபடுத்தும் வல்லமை அற்றிருந்தவர்கள் இந்த இலகுவான துவேஷப் பிரசாரத்தைக் கையில் எடுத்தார்கள். இதனை திருவாளர் செ.இராசதுரை தனது தீந்தமிழாலும், பகுத்தறிவுக் கொள்கைகளாலும், கூட்டாட்சி முறையின் இலகுவான விளக்கங்களாலும் முதலிலே முறியடித்தார்.

1956களிலிருந்து, சி.மூ.இராசமாணிக்கம், பொ.மாணிக்கவாசகம் போன்றோரோடு மட்டு நகரிலும், கிராமங்களிலும் தோற்றம் பெற்ற பேச்சாளர்களும் கூட்டாட்சிக் கொள்கையை மக்கள் மனங்களில் படரவிட்டனர். கட்சிக்கு வெற்றியை ஈட்டிக் கொடுத்தனர்.

யாழ் துவேசத்தில் வண்டியோட்டியோர், ஓட்டுவோரெல்லாம் உண்மையில் தமது கொள்கையை விளக்கத் திராணியற்றிருந்தோரே. அன்றும், இன்றும் இதுவே உண்மை. எஸ்.யு.எதிர்மனசிங்கம் (பட்டிருப்பு) அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் சிங்களம் மட்டும் தீர்மானத்தால் கட்சியை விட்டு வெளியேறினார். களனி மாநாட்டில் 18 மாசி 1956ல் சிங்களம் மட்டும் தீர்மானம் நிறைவேற்றப்படமுன் இது நிகழ்ந்தது.

இதே நிலைப்பாட்டையே வி.நல்லையா அவர்களும் (கல்குடா) எடுத்திருந்தார். இவர்களெல்லாம் 20 மாசி 1956ல் இலங்கைத் தமிழரசுக் கட்சி நடாத்திய அடைப்பு (ஹர்த்தால்) மற்றும் கறுப்புக் கொடிப் போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கினார்கள். இதற்கு மேலதிகமாக எஸ்.யு.எதிர்மனசிங்கம் அவர்கள் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியில் சேர்வதற்கு செ.இராசதுரை மூலம் முயற்சி எடுத்தார். ஆனால், சி.மூ.இராசமாணிக்கம் அவர்கள் முந்திக் கொண்டார். தனக்கு வேட்பாளர் நியமனம் கிடைக்காதென்று கருதியதால் எஸ்.யு.எதிர்மனசிங்கம் அவர்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் தொடர்பைத் துண்டித்தார். கொள்கை தொடர்பில் ஏற்பட்ட முரண்பாடல்ல இது.

வி.நல்லையா அவர்கள் யாழ் எதிர்ப்பை பரப்புரைக்காகத் தொடர்ந்தும் கடைப்பிடித்தார். ஆனாலும், அவரது உறவினர்கள் யாழ்ப்பாணத்தாரோடு திருமண உறவுகளை வைத்துக் கொண்டார்கள். 1965 பொதுத் தேர்தலில் வி.நல்லையா அவர்கள் அகில இலங்கைகத் தமிழ் காங்கிரஸ் சாடபில் அதன் மிதிவண்டி சின்னத்தில் போட்டியிட்டார்.

யாழ் எதிர்பப்பைப் பரப்புரைக்காகப் பயன்படுத்திய இன்னுமொருவர் கே.டபிள்யு.தேவநாயகம் (கல்குடா) அவர்கள். இவர் 1970களில் தமிழர் கூட்டணியிலும் பின் தமிழர் விடுதலைக் கூட்டணியிலும் சேர்ந்து உழைத்தவர். அவரது இரண்டாம் துணைவியார் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்.


இவ்வரிசையிலே இன்னொருவராக இடம் பெற்றவர் இராஜன் செல்வநாயகம் அவர்கள் (மட்டக்களப்பு) இவர் முழுக்க முழுக்க யாழ்ப்பாணத்தவர். இவரது தந்தையார் வியாபாரம் நிமித்தம் மட்டக்களப்பில் குடியேறியவர். இப்பொழுதும் சிலர் இந்தப் பேதம் ஓதுகின்றனர். இவர்களும் மேற்சொன்ன முன்னவர்கள் போலவே குறுகிய அரசியற் பரப்புரை செய்வோரேயாவர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியில் கொள்கை முக்கியம். அப்பொழுதும், இப்பொழுதும். சிலர் பரப்புரை செய்வது போல் கட்சியில் யாழ் மேலாதிக்கம் உண்டெனில் அது முறியடிக்கப்பட வேண்டிதொன்றே. சில நிகழ்வுகளை உதாரணம் காட்டிச் சிலர் தமது பிற்போக்கான கருத்துக்களை மேலோங்கச் செய்யும் எத்தனிப்பு முறியடிக்கப்பட வேண்டும். அதன் பொய்மையை தமிழ் மக்கள் உணர்ந்து செயற்பட வேண்டும். ஏனெனில் தமிழ்த் தேசியம் மிக முக்கியமானது. கட்டிக் காப்பாற்றப்பட வேண்டியது.

இவற்றையெல்லாம் முறியடித்துக் கொண்டு இலங்கைத் தேசியத்தின் நஞ்சாய் ஒற்றையாட்சிக் கோட்பாடு அமையும் என்ற கொள்கையை தந்தை செல்வா முன்வைத்தார். சி.மூ.இராசமாணிக்கம் அவர்கள் இக் கொள்கையை மக்கள்பாற் கொண்டு சென்றார். 1956 சித்திரையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் போட்டியிட்டார். வெறும் 106 வாக்குகளால் தோல்வியுற்றார்.

அவரது தேர்தல் பரப்புரையின் உண்மைகளை அதிக தாமதமில்லாமலே மக்கள் உணர்ந்தனர். 1956 ஆனி 05ல் வந்த சிங்களம் மட்டும் சட்டம் இவருக்கு எதிராக வாக்களித்த மக்களை கைபிசைந்து நிற்க வைத்தது.

1952ல் சி.மூ.இராசமாணிக்கம் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார். அப்போது சுயேட்சையாகக் கத்தரிக்கோல் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார். 1949ல் கல்லோயாக் குடியேற்றத் திட்டம் செயற்பாட்டுக்கு வந்தது. டி.எஸ்.சேனாநாயக்கா, பிரதமர் இதனைத் திட்டமிட்டார், தொடங்கியும் வைத்தார்.



பட்டிப்பளை ஆறே கல்லோயா எனப் பெயர்மாற்றம் பெற்றது. அது தமிழர்தம் பூமி. கி.மு 3ம் நூற்றாண்டில் தமிழ்க் குடியேற்றங்களால் செழிப்படைந்திருந்த பகுதி. கி.பி 13ம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ் மன்னன் மாகோனின் ஆட்சியில் வளர்ச்;சி கண்ட பூமி.

டி.எஸ்.சேனநாயக்கா அவர்களின் நெறிவுறுத்தலுக்கமைய திட்ட வரைவு மேற்கொள்ளப்பட்டது. பிரதமரின் நிரந்தரச் செயலாளர், சேர்.கந்தையா வைத்தியநாதன் நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம், கி.அழகரெத்தினம் நில அளவைப் பணிப்பாளர் நாயகம், கலாநிதி எஸ்.புரோக்கியர் என்போர் பணியைத் திறம்பட நிறைவேற்றினர். நாற்பது கிராமங்களை அமைப்பதற்கான வரைபடம் தயார். ஆறு கிராமங்கள் தான் தமிழர்கட்கு என்றபோது தான் திட்டம் வரைந்த குழுவினர் திகைத்தனர். நான்கைந்தைக் கூட்டிக் கேட்கக் கூட அவர்களால் முடியவில்லை!

அப்போது மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களாயிருந்த எஸ்.யு.எதிர்மனசிங்கம் (பட்டிருப்பு), அகமட்லெவ்வை சின்னலெவ்வை (மட்டக்களப்பு), வி.நல்லையா (கல்குடா) அதிகளவு குடியேற்றக் கிராமங்கள் இப்பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்ததாகத் தெரியவில்லை. ஆனால், தமிழரசுக் கட்சியினர் வடக்கில் இருந்து வந்து அப்போதே அவர்களுடன் தொடர்பில் இருந்த செ.இராசதுரை அவர்களையும் அழைத்துக் கொண்டு கல்முனை, அட்டாளச்சேனை, போன்ற இடங்களுக்கு வந்தார்கள். நடைபெறவுள்ள திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் பற்றி அங்கிருந்த தமிழ் முஸ்லீம் மக்களுக்கு விளக்கினார்கள். மக்களும் விழிப்படைந்தார்கள்.

சி.மூ.இராசமாணிக்கம் அவர்கள் இன்னும் தமிழரசுக் கட்சியில் சேரவில்லை. எனினும், அவரது உணர்வுகள் தமிழரசில் தான் ஒன்றியிருந்தன. தனது மறைமுக ஆதரவை அவர் வழங்கினார். 1952 பொதுத் தேர்தலில் சுயேட்சையாக வெற்றி பெற்றார். தமிழர்கட்கென ஒதுக்கப்பட்ட கிராமங்களிலும் அரசின் ஒத்துழைப்பை நாடாமலே மக்களைக் கொண்டு குடியேற்றினார். அரச உதவியை நாடினால் அவர்கள் சாக்குப் போக்குச் சொல்லி தாமதம் செய்து அந்தக் கிராமங்களிலும் சிங்களவர்களையே குடியேற்றுவார்கள் என்பதை அவர் அனுபவம் மூலம் அறிந்து வைத்திருந்தார். காணித் திணைக்களத்தில் பணிப்பாளராகப் பணிபுரிந்த அனுபவமும் அவருக்கு இவ்விடயத்தில் உதவியது.

மேற்குறித்தவாறு 1956 பொதுத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் போட்டியிட்டுத் தோற்ற போதும், அவரது மனம் கவர்ந்த தந்தை செல்வாவின் கொள்கைகளைப் பரப்புவதில் ஆர்வத்தோடு செயற்பட்டு வந்தார். இவ்வேளையில் 1956 ஆனி 05ல் காலிமுகத் திடலில் சிங்களம் மட்டும் சட்டத்துக்கெதிரான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சத்தியாக்கிரகம் இடம்பெற்றது. காடையர்கள் சத்தியாக்கிரகிகளைத் தாக்கினர். பின் இது இனக்கலவரமாக உருவெடுத்தது.

கல்லோயாக் குடியேற்றத் திட்டத்தில் குடியேறிய தமிழர்கள் தாக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார்கள். காடையர்கள் இராணுவம் சகிதம் அம்பாறையின் எல்லைக் கிராமமான துறைநீலாவணையைத் தாக்கும் எண்ணத்துடன் துறைநீலாவணை முகப்பை அண்மித்தனர். எதிர்பாராத திசைகளிலிருந்தெல்லாம் தமிழரின் துப்பாக்கி வேட்டுக்கள் கிளம்பின. காடையர்கள் திரும்பி ஓடினர். மக்களின் பின்னணியிலே சி.மூ.இராசமாணிக்கம் நின்றார்.

இரண்டொரு நாட்களின் பின் இராணுவத் தளபதி ஒருவரின் தலைமையில் இரணுவ அணியொன்று துறைநீலாவணையைச் சுற்றி வளைத்தது. சி.மூ.இராசமாணிக்கம் அவர்கள் நிகழ்விடத்துக்குச் சென்றார். தளபதியைக் கண்டார். தன்னை வீழ்த்திய பின்தான் தனது மக்களைத் தொட முடியும் என தனது சட்டைப் பொத்தான்களைக் களற்றி தளபதிக்கு தன் மார்பைக் காட்டிச் சுடும்படி கர்ச்சித்தார். தளபதி அடங்கினார். வந்த வழியே திரும்பினார்.

முன்னர் குறிப்பிட்;டது போல 1956 மாசி மாதத்தில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் போராட்டங்கள், மாநாடுகள், முக்கிய பரப்புரைகளிலெல்லாம் சி.மூ.இராசமாணிக்கம் அவர்கள் ஈடுபாட்டுடன் கலந்து கொண்டார். 1960 பங்குனி மற்றும் 1960 ஆடிப் பொதுத் தேர்தல்களில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் போட்டியிட்டு இரண்டு தேர்தல்களிலும் வென்றார்.

சி.மூ.இராமாணிக்கம் அவர்கள் சிறந்த கல்விமமான். இலங்கைகப் பேராதனைப் பல்ககலைக்கழத்தில் கற்றுப் பொருளாதாரத் துறையில் கலை இளவல் சிறப்புப் பட்டம் பெற்றவர். இலண்டன் பல்கலைக் கழகத் தேர்வில் சித்தியெய்தி விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்றவர். காணி ஆணையாளர், மாவட்டப் பதிவாளர் என்னும் பதவிகளையும் வகித்தவர். மக்களின் வேண்டுகோளால் அரசியலில் ஈடுபட்டவர். தந்தை செல்வாவின் கொள்கைகளால் கவரப்பட்டு தமிழ்த் தேசியத்தில் தோய்ந்தவர். இதனால் நிலையான அரசியற் கொள்கையோடு தமிழ் மக்களுக்காய் தன்னை அர்ப்பணிக்கத் தலைப்பட்டார். இவரின் ஆற்றலையும், ஆளுமையையும் அடையாளம் கண்ட தமிழரசுக் கட்சி 1961, 1962, 1969 களில் நடைபெற்ற கட்சியின் மூன்று மாநில மாநாடுகளிலும் கட்சித் தலைவராக அவருக்கு மகுடம் சூட்டியது. கடைசியாக 1972ல் நடைபெற்ற சிறப்பு மாநாட்டுக்கும் அவரே தலைமை தாங்கினார்.

1961 தை மாதம் 19, 20, 21ம் நாட்களில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஏழாவது மாநில மாநாடு யாழ்ப்பாணத்தில் நடந்தேறியது. நாற்பத்தொரு வயதினரான சி.மூ.இராசமாணிக்கம் தலைமை தாங்கினார்.

இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் தாயகமான தெற்கு முனையான மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து நான் வந்திருக்கின்றேன். யாழ்ப்பாணத்தில் உள்ள உங்களிலும் பார்க்க சிங்களத் தாக்குதலின் வேகத்தை நன்கறிந்தவன் நான் எனத் தொடங்கிய சி.மூ.இராசமாணிக்கம் அவர்கள்,

எவ்வகையில் பார்த்ததாலும் நாம் ஒரு தேசிய இனம் என்பதில் ஐயமில்லை. நாம் ஒரு திட்டவட்டமான எல்லையுள்ள பிரதேசத்தைத் தாயகமாகக் கொண்டுள்ளோம். ஒரு பொது மொழியைப் பேசுகின்றோம். நீண்ட நெடுங்காலமாக வளர்ந்து வந்த தனிப் பண்பாட்டையும், பாரம்பரியத்தையும் எமது சொந்தமாகக் கொண்டிருக்கின்றோம். இவை எல்லாவற்றுக்கும் மேலாக 'நாம் ஒன்று' எனும் உணர்ச்சியை தமிழ் பேசும் மக்களாகிய நாமெல்லாம் பெற்றிருக்கின்றோம் என முழக்கமிட்டார்.

தனிமனிதன் வாழும் உரிமையை மறுப்பது கொலை. ஒரு இனத்தின் வாழும் உரிமையை மறுப்பது இனக் கொலை. 1946 மார்கழி 11ம் நாளைய ஐநா பொதுச் சபையின் 96வது தீர்மானத்தில் 'ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவர்களைக் கொல்லுதல், உடல் உளத்துக்குப் பாரதூரமான ஊனம் விளைவித்தல், முழுமையாகவோ, பகுதியளவிலோ அழிக்கக்கூடிய வாழ்க்கைச் சூழலை திட்டமிட்டு ஏற்படுத்துதல் என்பன இனக்கொலை என்பதைச் சுட்டிக்காட்டி அரசின் இன அழிப்புச் செயற்பாட்டைக் கண்டித்தார்.

1962 ஆவணி 31 மற்றும் புரட்டாசி 1ம், 2ம் நாட்களில் மன்னாரில் தமிழரசின் எட்டாவது மாநில மாநாடு இடம்பெற்றது. இதன் தலைவராகவும் சி.மூ.இராசமாணிக்கம் அவர்களே விளங்கினார்.

நிலைமை தாங்க முடியாததாகிவிட்டது. தன்மானமுள்ள எந்தத் தமிழ் மகனும் இந்த நிலைகண்டு உள்ளம் குமுறாமல் இருக்க முடியாது. ஆனால் பரிகாரம் என்ன? இப்படியான நிலையில் அகப்பட்ட வேறு தேசங்கள் எதிர்ப்புப் புரட்சியையோ அன்றி உள்நாட்டுப் போரையோ வழியாகக் கொண்டார்கள் என்பதுதான் சரித்திரம் கூறும் உண்மை. அதுதான் சம்பிரதாய வழியாகவும் இருந்து வந்தது. ஆனால், நிச்சயமாகச் சொல்லுவேன் ஆயுதப் போர் எவ்வித பிரச்சனைக்கும் தீர்வுகாண மாட்டாது. அவை மேலும் பிரச்சனைகளை உண்டாக்கும். பலாத்காரம் பலாத்காரத்தையே வளர்ப்பதாகும்

'தமிழரசுத் தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களும், மகாத்மா காந்தி காட்டிய வழியையே காட்டியுள்ளார். அப்பாதையில் செல்லும் போது எத்தகைய ஆத்திரமூட்டும் நிகழ்ச்சி நிகழ்ந்தாலும், இம்மியளவும் பலாத்காரத்தை உபயோகிக்காது சாத்வீகத்தில் என்றும் தளராது உறுதியாக நின்று விடுதலை காண்போமாக என்றார்.

1969 சித்திரை 7, 8, 9ம் நாட்களில் உடுவிலில் நடைபெற்ற தமிழரசின் பதினொராவது மாநில மாநாட்டுக்குத் தலைமை வகித்த சி.மூ.இராசமாணிக்கம் அவர்கள் கூட்டாட்சியில் (சமஷ்டி) ஒருவரும் நட்டமடையப் போவதில்லை. நிச்சயமாகச் சிங்கள மக்கள் நட்டமடைய மாட்டார்கள். ஏனென்றால், இது பெரும்பான்மையோரின் பிரதிநிதித்துவத்தைக் குறைத்து, சிறுபானன்மையினருக்குக் கூடுதலான பிரதிநிதித்துவம் வழங்கும் திட்டத்தைப் போன்றதல்ல. ஆதலால் கூட்டாட்சி அரசியல் எல்லோரும் விரும்ப வேண்டிய ஒரு இலட்சியமாகும் என்ற தந்தை செல்வாவின் தமிழரசுத் தொடக்க உரையின் முக்கிய குறிப்பைச் சுட்டிக் காட்டியதோடு, பிரதேசம், மதம், சாதி ஆகியவற்றையிட்டு தமிழ் பேசும் மக்கள் மத்தியில் உள்ள வேற்றுமைகளைக் களைந்து, இனத்தை ஒற்றுமைப் படுத்துவது எமது கட்சியின் அடிப்படைக் கொள்கையாகும் என்றார்.

1972 தை 30ம் நாள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழரசின் சிறப்பு மாநாட்டுக்கும் சி.மூ.இராசமாணிக்கம் அவர்கள் தலைமையேற்றார். சி.மூ.இராசமாணிக்கம் அன்றைய தலைமையுரையிலே இரண்டாம் குடியரசின் அரசியல் நிர்ணய சபைக்கு தமிழரசை அங்கமாகக் கொண்ட தமிழர் கூட்டணி சமர்ப்பித்த ஒன்பது அம்சக் கோரிக்கையை விளக்கிப் பேசினார்.

மேலும், 'இரண்டாம் குடியரசு அரசியலமைப்பினால் சிங்கள மக்கள் தம் உரிமையை முழுமையாகப் பெறுகின்ற அதே செயலினால், தமிழினம் முழுமையாக அடிமையாக்கப்படுவதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது' எனப் பிரகடனப் படுத்தினார்.

இவற்றாலெல்லாம் அமரர் சி.மூ.இராசமாணிக்கம் அவர்கள் 1956ம் ஆண்டு தொட்டு தமிழ்த் தேசியம், தமிழர் தாயகம், தமிழ் பேசுமினத்தின் சுயநிர்ணயம் என்பவற்றை வலியுறுத்தி வந்தமை புலனாகின்றது. இவற்றைப் போல் பேதப்படுத்தும் பிராந்திய வேற்றுமையை அவர் நியாயத்தோடு நிராகரித்தார் என்பதும் தெளிவாகின்றது.

சிங்கள மக்கள் கண்டியச் சிங்களவர், கரையோரச் சிங்களவர் என்ற பாரம்பரியத்தை கட்டிக் காத்து வரலாற்றுக் காலம் முழுக்க வாழ்ந்து வந்தார்கள். சுதந்திரமடைந்ததும் அதனை அப்பால் தள்ளி சிங்கள தேசிய இனமாக ஒன்றுபட்டு எழுந்து நிற்கின்றார்கள். நாமும் எம்மிடையே உள்ள வேற்றுமைகளைக் களைய வேண்டும். தந்தை செல்வா, சி.மூ.இராசமாணிக்கம் போன்றோர் காட்டிய வழியில் செல்ல வேண்டும். மேலாதிக்கம் ஏதும் இருப்பதாய் உணர்ந்தால், அதற்கேற்ற எச்சரிக்கையுடன் நடந்துகொள்வதே வழி. கொள்கை தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் சொந்தமானது. இந்தக் கொள்கை இல்லையென்றால் கிழக்கு மாகாணம் கதிர்காமமாய், காலியாய், நீர்கொழும்பாய், சிலாபமாய், புத்தளமாய் தமிழர் அடையாளம் முற்றாக மறைந்த அல்லது மறைந்து கொண்டிருக்கும் மாகாணமாய் ஆகியிருக்கும்.

எனவே, சி.மூ.இராசமாணிக்கனாரையும் அவரது செயற்பாடுகளையும் மனதில் நிறுத்திக் கொள்வோம். அவர் காட்டிய தந்தை செல்வாவின் வழியில் ஒன்றுபடுவோம். தமிழின இருப்பைக் கட்டிக் காப்போம். கூட்டாட்சி ஐக்கிய இலங்கைக்காக உழைப்போம். தமிழ் பேசும் தேசிய இனமாக எழுச்சியடைவோம்.

**கி.துரைராசசிங்கம்**
சட்டத்தரணி,முன்னாள் பொதுச் செயலாளர்,இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி.